# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு III

பகுதி 2

Kerala Reader - Tamil
Standard III
Part - 2

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2024

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# தமிழ்

# 3

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2024
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

இயல்பாகவே குழந்தைகளிடம் மொழியாற்றல் உண்டு என்பது அறிஞர் பெருமக்கள் கருத்து. குழந்தைகள் தன்னிடம் பிறர் பேசுவதையும், பிறர் தங்களுக்குள் பேசிக் கொள்வதையும் உற்றுக் கவனிக்கும் ஆர்வமுடையவர்கள். அந்த ஆர்வமே அவர்களது மொழித் திறனை வேகப்படுத்துகிறது. மொழி நிலையில் ஒவ்வொரு நாளும் ஒரு வளர்ச்சிப் படிநிலையைக் காண இயலும். மொழி அவர்களிடம் வேகமாக வளர்கிறது என்றே சொல்லலாம்.

வல்லுநர்கள் தங்கள் விருப்பப்படிப் பாடங்களை நிர்ணயிக்கும் வழக்கம் இன்றில்லை. குழந்தைகளின் மனநிலையையும் ஆர்வத்தையும் அறிந்தே மொழிப்பாடங்களை உருவாக்கவேண்டும். இது குறித்து ஏராளமான ஆய்வுகள் நடந்துள்ளன. அத்தகைய ஆய்வுகள் முன்வைத்த ஆக்கப்பூர்வமான பரிந்துரைகளின் அடிப்படையிலேயே நாம் பாடநூல்களைப் படைத்துவருகின்றோம். மேலும், அறிவியல் வளர்ச்சிக்கும் சூழல் மாற்றங்களுக்கும் ஏற்பக் கற்றல் அணுகுமுறையில் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

சின்னக் குழந்தைகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்குச் சொல்லும் கருத்து எளிமையாகவும் இனிமையாகவும் இருக்கவேண்டும். ஆடிப் பாடத் தகுந்த பாடல்களையும், ஆர்வத்தோடு கேட்கத் தூண்டும் கதைகளையுமே அவர்கள் பெரிதும் விரும்புவர். பாடநூலை ஓர் அடித்தளமாகக் கொண்டு ஆக்கப்படும் அறிவு, சமூக நலனுக்கு உதவுவதாகவும் இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் பின்பற்றியே இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

உங்கள் கற்றல் செயல்பாடுகள் கற்கண்டாய் இனிக்கட்டும்!

வாழ்த்துகள்.

**முனைவர். ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - III (Part 2)

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Helen Japa Rose, S.L.**
Asst. Professor in Tamil, Govt. College, Munnar, Idukki

### Experts

**Dr. Kumar, S.**
Asst. Professor in Tamil, Govt. Training College, TVPM.

**Dr. Eswaran, P.**
Asst. Professor in Tamil, Govt. College, Munnar, Idukki

### Members

**Anishkumar, A.**, LPST, MAILPS, Murukady, Kumily, Idukki.
**Eswaran, T.**, LPST, ALPS, Luckham, Munnar, Idukki.
**Gnana Jeyaseelan, G.**, HM, ALPS, Luckham, Munnar, Idukki.
**Jayachandra Kumar, T.**, PD Teacher, GLPS, Ayinkamam, Parasala, TVPM.
**Nagendran, S.**, HM, Govt. UPS, Kalaar, Munnar, Idukki.
**Pushparaj, G.**, LPSA, ALPS, Pullivasal, Munnar, Idukki.
**Ragupathi, M.**, HM, GTLPS, Champakad, Munnar, Idukki.
**Russel Raj, R.**, (Rtd.) HM, ALPS, Pullivasal, Munnar, Idukki.
**Sandra Raj, T.**, LPST, Govt. Fort UPS, Manacaud, Thiruvananthapuram.
**Selvakumar R.**, (Rtd.) HM, ALPS, Periyavari, Munnar, Idukki.
**Sujathakumari, N.**, LPST, Govt. Fort UPS, Manacaud, Thiruvananthapuram.
**Aparna Giri, R.**, Chackai, Thiruvananthapuram.
**Arya S Rajeev.**, Kariyam, Poudikonam, Thiruvananthapuram.
**Premjith Sureshbabu**, Nelolpana, Pakaloor, Thiruvananthapuram.
**Sarath Prem**, Praveena, Kilimanoor, Thiruvananthapuram.

### Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
Assistant Professor (Tamil), SCERT.


மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


பக்கம்

அலகு 5 காக்க.... காக்க ........ 79 - 98
- வாழ விடுங்கள் ........ 80 - 86
- வையகம் வாழ்ந்திட ........ 87 - 91
- செல்லமே செல்லம்! ........ 92 - 98

அலகு 6 பழமையும் புதுமையும் ........ 99 - 116
- மாற்றம் ........ 100 - 105
- பயணிகளின் கவனத்திற்கு ........ 106 - 110
- கற்க கசடற ........ 111 - 116

அலகு 7 தொழிலும் வாழ்வும் ........ 117 - 134
- உழைப்போம் உயர்வோம் ........ 118 - 121
- பனையும் மனையும் ........ 122 - 128
- வாழ்வுக்கு வழி ........ 129 - 134

அலகு 8 அறிவின் திறவுகோல் ........ 135 - 149
- காற்றினிலே... ........ 136 - 140
- உள்ளம் மகிழ ........ 141 - 145
- ஹலோ! ஹலோ! ........ 146 - 149

அகரமுதலி ........ 150

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

## அலகு 5

# காக்க........ காக்க



நம்மை நாம் பாதுகாத்துக் கொள்வதைப் போன்று பிற உயிரினங்களையும் பாதுகாக்க வேண்டும். பெற்றோர் குழந்தைகளைப் பராமரிப்பது போன்று, நாம் வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகளையும் பராமரித்துப் பாதுகாக்க வேண்டும். அவற்றிடமிருந்து நம்மையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

# வாழ விடுங்கள்



## துள்ளி! துள்ளி!

துள்ளித் திரியும் முயல்கூட்டம்;
தொட்டால் சுருளும் முள்பன்றி.
புள்ளி மான்கள் பெருங்கூட்டம்;
புலியின் கோப உறுமல்கள்;

சீறும் சிறுத்தைப் பதுங்கல்கள்;
சிலிர்க்கும் சிங்கக் கர்ச்சனைகள்;
ஊறிக் கிடக்கும் நீர்யானை
உலவும் காண்டா மிருகம்தான்;

கூட்ட மாக யானைகள்
குரங்கின் கூட்டம் மரங்களிலே;
வேட்டை யாடும் வேங்கைகள்;
வீரம் நிறைந்த காட்டெருது;

ஒட்டகச் சிவிங்கி உயரம்காண்;
ஓநாய் நரிகள் கூட்டம்காண்
எட்ட நிற்கும் வரிக்குதிரை;
இடையே நகரும் மலைப்பாம்பு:



காட்டில் வாழும் விலங்குக்குக்
கடின மான வாழ்க்கைதான்
விருந்தைத் தினமும் சுவைத்திடுமே;
வீட்டில் வளரும் நாய்பூனை

பட்டி தன்னில் ஆடுகள்தாம்;
பசுவும் கன்றும் தொழுவத்தில்;
முட்டித் தள்ளும் காளைக்கும்;
முழுதாய்க் காப்பு உழவனிடம்:

வண்டி இழுக்கும் குதிரைக்கும்
பொதியைச் சுமக்கும் கழுதைக்கும்
அண்டி வாழும் நிலைதனையே
ஆண்டாண்டுகளாய்த் தந்துவிட்டோம்

வனத்தை அழிக்கா திருந்திட்டால்
வாழும் காட்டில் விலங்குகள்தாம்;
மனமி ரங்கி விலங்குகளை
மனிதத் தோடு காத்திடுவோம்!

கே.பி.பத்மநாபன்





## செயல்பாடுகள்

- பாடலை இராகத்துடன் பாடுங்கள்.
- பாடலில் இடம்பெற்றுள்ள விலங்குகளின் தனித்தன்மைகளைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

  எ.கா : துள்ளித்திரியும் முயல்கூட்டம்

  - ....................................................................................
  - ....................................................................................
  - ....................................................................................

- "ஒன்றும் பலவும்" – எ.கா போன்று மாற்றி எழுதுங்கள்

  எ.கா : யானை – யானைகள்

  - பசு – ....................
  - மான் – ....................
  - சிறுத்தை – ....................
  - குரங்கு – ....................
  - வேங்கை – ....................
  - நரி – ....................
  - குதிரை – ....................
  - ஆடு – ....................
  - கழுதை – ....................
  - விலங்கு – ....................

- பாடப்பகுதியில் வரும் கடைசி நான்கு வரிகளை வாசித்துக் கருத்தை எழுதுங்கள்.

## ஏமாந்த புலி

ஒரு நாள் வழிப்போக்கன் ஒருவன் காட்டு வழியே சென்று கொண்டிருந்தான்.

காட்டில் எங்கிருந்தோ புலியின் உறுமல் ஓசை கேட்டது. வழிப்போக்கன் பயத்துடன் ஓடத் தொடங்கினான்.

"வழிப்போக்கனே, பயப்படாதே! இங்கே வா! நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்" என்ற குரல் கேட்டது.

வழிப்போக்கன் தயக்கத்துடன் குரல் வந்த திசையை நோக்கிச் சென்றான்.

அங்கு ஒரு கூண்டில், புலி அடைபட்டு இருந்தது. வேட்டைக்காரர்கள் சிலர் புலியை உயிருடன் பிடிப்பதற்காக ஒரு கூண்டு செய்து அதற்குள் ஓர் ஆட்டை விட்டு வைத்திருந்தனர். ஆட்டிற்கு ஆசைப்பட்ட புலி கூண்டிற்குள் மாட்டிக் கொண்டது.

வழிப்போக்கனைப் பார்த்த புலி, "வழிப்போக்கனே, என்னை இந்தக் கூண்டிலிருந்து விடுவித்து விடு, நான் உனக்குப் பல உதவிகளைச் செய்வேன்" என்றது.

"நீயோ மனிதர்களைக் கொன்று தின்பவன். உன்னை எப்படி நான் விடுவிக்க முடியும்?" என்று கேட்டான் வழிப்போக்கன்.

"மனிதர்களைக் கொல்லும் குணம் எங்களுக்கு உண்டுதான். அதற்காக உயிர் காக்கும் உன்னைக் கூடவா அடித்துக் கொன்றுவிடுவேன்? அவ்வளவு நன்றியில்லாதவனா நான்? பயப்படாமல் கூண்டின் கதவைத்திற. உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்" என்று நயமாகக் கேட்டுக் கொண்டது புலி.

வழிப்போக்கன் புலியின் வார்த்தையை உண்மையென்று நம்பிவிட்டான். கூண்டின் கதவைத் திறந்தான். அவ்வளவுதான்! புலி வழிப்போக்கனின் மேல் பாய்வதற்குத் தயாராயிற்று.





இதனைக் கண்ட வழிப்போக்கன், "புலியே, நீ செய்வது உனக்கே நியாயமாகப் படுகிறதா? உன் பேச்சை நம்பியல்லவா உன்னைக் கூண்டிலிருந்து விடுவித்தேன்! அதற்கு இதுதானா நீ காட்டும் நன்றி" என்றான்.

என் உயிரைக் காத்துக் கொள்வதற்காக நான் ஆயிரம் சொல்லுவேன். அதை நீ எவ்வாறு நம்பலாம்? "மனிதர்கள் என்றால் பகுத்தறிவுள்ளவர்கள் என்று தானே பொருள். அந்த அறிவைக் கொண்டு இது நல்லது, இது கெட்டது என்று பகுத்தறிய முடியாதவன் நீ. முட்டாள்தனமான உன் செய்கைக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?" என்றது புலி.

"நீ செய்வது நியாயமில்லை. உன்னைக் கூண்டிலிருந்து விடுவித்ததற்கு இம்மாதிரி நடந்து கொள்வது முறையல்ல" என்றான் வழிப்போக்கன். அந்நேரம் அவ்வழியாக ஒரு நரி வந்து கொண்டிருந்தது.

"இதனிடமாவது நியாயம் கேட்டுப் பார்ப்போம்" என்று எண்ணிய வழிப்போக்கன் நடந்த கதையினை நரியிடம் கூறினான்.

"எங்களுடைய தொழில் அனைவரையும் அடித்துக் கொன்று சாப்பிடுவதுதான். இது இவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் கூட என்னைக் கூண்டிலிருந்து விடுவித்தான். முட்டாள்தனமான இந்தச் செய்கைக்கு உரிய பலனை இவன் அனுபவித்தே தீர வேண்டும்" என்றது புலி.

அனைத்தையும் கேட்ட நரி ஒன்றும் புரியாததைப் போல் பாவனை செய்தது.

"நீங்கள் இந்த மாதிரி சொன்னால் எனக்கு ஒன்றுமே புரியாது. ஆரம்பத்திலிருந்து சொல்லுங்கள்" என்றது நரி. உடனே புலி சொல்லத் தொடங்கியது;

"நான் அந்தக் கூண்டிற்குள் அடைந்து கிடந்தேன்." இதைக் கேட்ட நரி, "எந்தக் கூண்டிற்குள்?" என்றது.







"அதோ இருக்கிறதே அந்தக் கூண்டிற்குள்" என்றது புலி.

"எப்படி அடைந்து கிடந்தீர்கள்?" என்றது நரி.

புலி விடுவிடுவென்று கூண்டிற்குள் சென்றது. இதுதான் சமயம் என்று கருதிய நரி சட்டென்று கூண்டுக் கதவை இழுத்து மூடிவிட்டது.

"நரியாரே, இது என்ன அயோக்கியத்தனம்! நியாயம் கூறுவதாகக் கூறி என்னை மறுபடியும் கூண்டில் அடைத்து விட்டீரே!" என்று கத்தியது புலி.

"பேசாமல் கூண்டிற்குள்ளேயே இருங்கள். நான் ஒன்றும் இந்த வழிப்போக்கனைப் போல் முட்டாள் அல்ல. உங்களுக்குச் சாதகமாக நியாயம் சொன்னால் முதலில் வழிப்போக்கனை அடித்துக் கொல்வீர்கள். பிறகு என்னையே அடித்துக் கொன்று விடுவீர்கள். அதனால்தான் உங்களைக் கூண்டிற்குள் செல்லுமாறு செய்து கதவைப் பூட்டி விட்டேன் என்றது நரி.

– நெ.சி. தெய்வசிகாமணி

## செயல்பாடுகள்

- கதையை வாசித்து அதில் கூறப்படும் நீதியைக் கூறுங்கள்.
- புலி மீண்டும் கூண்டிற்குள் அடைபடாவிட்டால் என்ன நிகழ்ந்திருக்கும்? கதையின் முடிவை மாற்றிக் கூறுங்கள்.
- குறியீடுகளைப் பயன்படுத்துங்கள்.

  பாடப்பகுதியை வாசித்துத் தொடர்களில் வரும் குறியீடுகளை அடையாளப்படுத்துங்கள்.

  வழிப்போக்கனே இங்கே வா நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்

  வழிப்போக்கனைப் பார்த்த புலி வழிபோக்கனே என்னை இந்தக் கூண்டிலிருந்து விடுவித்துவிடு நான் உனக்குப் பல உதவிகளைச் செய்வேன்.

  நீயோ மனிதர்களைக் கொன்று தின்பவன் உன்னை எப்படி நான் விடுவிக்க முடியும் என்றான் வழிப்போக்கன்.

## புகலிடம்

ஆசிரியர் : என்ன? வகுப்பில் சில மாணவர்கள் வராதது போலத் தோன்றுகிறதே. அவர்கள் எல்லாம் விடுமுறைக் கடிதம் கொடுத்து முறையாக அனுமதி பெற்றார்களா?.............

மாணவன் : ஐயா, எல்லோரும் முறையாக விடுப்புக் கடிதம் கொடுத்திருக்கிறார்கள்.

ஆசிரியர் : ஓஹோ ....... சரி, நானும் இன்று என்ன பாடத்தை நடத்த வேண்டுமோ? அதை நடத்துகிறேன்.......

மாணவன் : என்ன பாடம்.....?

ஆசிரியர் : விலங்கியல் தான் ............ மிருகங்களைப் பற்றித் தான்!

மாணவன் : காட்டு விலங்குகளைப் பற்றியா? வீட்டு விலங்குகளைப் பற்றியா? ஐயா

ஆசிரியர் : காட்டு விலங்குகள் பற்றியும்...... வீட்டு விலங்குகள் பற்றியும் பேசப்போகிறேன்... மனிதர்கள் எல்லா மிருகங்கள் மீதும் அன்பாக இருக்க வேண்டும். ஏதோ ஒரு வெறிச் செயலில் காட்டு மிருகங்கள் வாழும் காட்டுக்குச் செல்லக் கூடாது. அவற்றை வேட்டையாடவும் கூடாது........

மாணவன் : ஆனால் சில சமயம் சிங்கம், புலி, சிறுத்தை, கரடி, யானை போன்றவை காட்டை விட்டு ஊர்களுக்கும் வந்து விடுகின்றனவே.....

ஆசிரியர் : ஆமாம். அப்பொழுது நீங்கள் என்ன செய்ய வேண்டும்? வனத்துறையினருக்குத் தகவல் கொடுக்க வேண்டும்..... அவர்கள் வந்து அந்தக் காட்டுமிருகங்களை மடக்கிப்பிடிப்பார்கள். மறுபடியும் அவைகளை அந்தக் காட்டுக்கே கொண்டு சென்று விட்டு விடுவார்கள்..... ஆனால் அவைகளைத் துப்பாக்கி, வெடிகுண்டு மூலம் சுட்டுத்தள்ளிச் சாகடித்துவிடக் கூடாது.

மாணவன் : ஏன் ஐயா சுட்டுக் கொல்லக் கூடாது..... அவை மனிதனைக் கொல்லத்தானே வந்தன. அதனால் சுட்டுக் கொன்று விடவேண்டியது தானே..........

ஆசிரியர் : மிருகங்களைத் துன்புறுத்தக்கூடாது. மிருகங்களுக்குத் தீங்கு செய்யக் கூடாது. அது

மட்டுமா.. காட்டு மிருகங்களுக்காக பல கால்நடை மருத்துவமனைகளைப் பராமரித்து வருகிறோம்.... அங்கே அடிபட்டுக் காயம் பட்ட மிருகங்களைக் கொண்டு செல்லலாம்.... மருந்து வைத்துக் கட்டலாம்.... அவைகளை மீண்டும் வனப்பகுதியிலேயே கொண்டு சென்று விடலாம்... அவைகளும் நம்மைப் போன்ற உயிர்கள்தான்...... அது அதன் இனங்களோடு வாழட்டும்! ஆனந்தமடையட்டும்.

மாணவன் : நீங்கள் சொல்றது சரிதான் ஐயா.......

## செயல்பாடுகள்

கலந்துரையாடுங்கள்.

விலங்குகளைத் துன்புறுத்துவது சரியா? தவறா? கலந்துரையாடிக் கருத்துகளை வகுப்பில் கூறுங்கள்.

குழுவில் சேராததை வட்டமிடுங்கள்.

| | | |
|---|---|---|
| • கழுகு | கோழி | காகம் |
| • பசு | சிங்கம் | கரடி |
| • குருவி | மயில் | வாத்து |
| • புலி | பூனை | சிறுத்தை |

நான் யார்?

விடுகதைகளை வாசித்து விடையை எழுதுங்கள்.

**அ)** **காக்கிச்சட்டை அணியாதவன்**
**காவலுக்குக் கெட்டிக்காரன்! நான் யார்?**

**ஆ)** **பச்சை நிறத்தழகி, பவள வாய்ச் சொல்லழகி வீட்டிலும் இருப்பாள், காட்டிலும் இருப்பாள்! அவள் யார்?**

**இ)** **வாசமில்லாப் பூ வைத்தவள்**
**வளைய வளைய வருகிறாள்! நான் யார்?**



# வையகம் வாழ்ந்திட...



## காடு

உதிர்ந்து கிடக்கும் இலைகள்
ஒடிந்து கிடக்கும் கிளைகள்
அதிர்ந்து உறுமும் புலிகள்
அஞ்சி ஓடும் மான்கள்

அசைந்து கொடுக்கும் மரங்கள்
அசைவ தில்லை மலைகள்
இசைந்து பாடும் ஓடை
இனிது கனிகள் வாடை

மயில்கள் வண்ணப் பொழில்கள்
மாவில் இசைக்கும் குயில்கள்
கிளைகள் மாறும் கிளிகள்
குரங்கு வீசும் பழங்கள்

மரக தத்தின் விரிப்பில்
மணிகள் சுடர்தல் போலே
தரையில் பசும்புல் மீது
தங்கப் பூக்கள் சிரிப்பு

காடு அமைதி அழகு
கண்ணுக் கினிய விருந்து
காடு மனிதன் தொடக்கம்
காக்க நன்மை கிடைக்கும்

– தமிழிறைவன்

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- பாடலில் உங்களுக்குப் பிடித்த வரிகளைச் சொல்லுங்கள்/ எழுதுங்கள்.

  ..........................................................................

  ..........................................................................

  ..........................................................................

- பாடலில் இரண்டாம் எழுத்து ஒரே போன்று வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

  ..........................................................................

  ..........................................................................

  ..........................................................................

- இறுதி எழுத்து ஒரே போன்று வரும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுங்கள்.

  ..........................................................................

  ..........................................................................

  ..........................................................................

## முரட்டுச் சிங்கம்

ஒரு பெரிய அடர்ந்த காடு. அக்காட்டில் சிங்கம், புலி, கரடி போன்ற பெரிய மிருகங்களும், மான், குரங்கு போன்ற சிறிய மிருகங்களும் வாழ்ந்து வந்தன.

அவை காலம் காலமாக ஒற்றுமையாகக் காட்டில் வாழ்ந்து வந்தன. ஆனாலும், இக்காட்டிலுள்ள சிங்கங்களில் முரட்டுச் சுபாவமுள்ள சிங்கம் ஒன்று தனிக்காட்டு ராஜாவாக உலவி வந்தது.

இருப்பினும் காட்டிலுள்ள மான், குரங்கு ஆகியவற்றுடன் முரட்டுச்

சிங்கம் நட்பாகவே பழகி வந்தது. அவையும் தனியாக வாழும் முரட்டுச் சிங்கத்தின் மீது பாசமாய் இருந்தன.

இச்சிங்கம் காட்டில் உலவச் செல்லும் போது, மான்களுடன்தான் செல்வது வழக்கம். நாட்கள் ஆக ஆக மான்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. தான் அழைத்துச் செல்லும் மான்களைப் பிற விலங்குகளுக்குத் தெரியாமல் ஒவ்வொன்றாகக் கொன்று சாப்பிட்டு வந்தது சிங்கம். ஒரு நாள் குட்டிமான் ஒன்றைத் தன்னுடன் அழைத்துச் சென்றது.

இதையறியாத மற்ற மான்கள் முரட்டுச் சிங்கத்துடன் உலாவச் சென்ற போது, குட்டிமான் திசை மாறி வேறு எங்கோ சென்றிருக்கலாம் என்றும் மீண்டும் நம்மிடம் வந்து சேரும் என்றும் நம்பிக் கொண்டிருந்தன.

குட்டிமானின் தாய், சேயை இழந்த ஏக்கத்தில் காட்டில் சுற்றித் திரிந்தது.



ஓர் அடர்ந்த புதர் பக்கத்தில் சிங்கம் கர்ஜிப்பதைப் போன்ற சத்தம் கேட்டது. உன்னிப்பாக அந்தத் திசை நோக்கி நடந்த தாய்மான் சேறும் சகதியுமாய் இருந்த படுகுழியில் முதலை ஒன்றுடன் ஒரு சிங்கம் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதைப் பார்த்தது.

இது நம்முடன் இருந்த முரட்டுச் சிங்கம்தான் என அறிந்து, உரத்த குரலில் சத்தமிட்டது. இந்தச் சத்தம் கேட்டு, காட்டிலுள்ள மற்ற மான்களும், குரங்குகளும், சிங்கங்களும் அங்குப் படையெடுத்தன.

மான்கள் எப்படியாவது அதைக் காப்பாற்ற வேண்டுமென சிங்கங்களிடம் கூறின. ஆனால், சிங்கங்கள் அது தங்களுக்கு இழைத்த கொடுமைக்குச் சாகட்டும் எனச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டன.

ஆனால், குரங்குகள் அதன் மீது இரக்கம் காட்டிக் காப்பாற்ற ஒரு திட்டத்தைத் தீட்டி மான்களிடம் கூறின.

அத்திட்டத்தின்படி குரங்குகள் மரத்திலிருந்து பிடுங்கிப் போட்ட கொடி ஒன்றை மான்கள் எடுத்துச் சென்று சிங்கம் விழுந்திருந்த குழியில் போட்டு, "ஏய்.... சிங்கமே நீ இதை உன் வாயால் கவ்விப் பிடித்துக் கொள். நாங்கள் உன்னை மேலே தூக்கிக் காப்பாற்றி விடுகிறோம்" எனக் கூறின.

அவ்வாறே, முரட்டுச் சிங்கமும் கொடியைக் கவ்விப் பிடித்துக் கொண்டு ஏறி பாதி குழி வரும் போது, கொடி அறுந்து மீண்டும் குழிக்குள் விழுந்துவிட்டது.

இதை மரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த குரங்குகள் ஏராளமான கொடிகளைப் பிடுங்கி ஒன்றாகக் கயிறு போல் திரித்துக் கீழே போட்டன. மான்கள் அதைச் சுருட்டிக் கொண்டு போய் மீண்டும் குழிக்குள் போட்டன. முரட்டுச் சிங்கம் அந்தப் பலமான கொடியைப் பிடித்துக் கொண்டு தப்பித்தோம், பிழைத்தோம் எனக் கூறிக் கொண்டு மேலே வந்து சேர்ந்தது.

தன்னை முதலையிடமிருந்து காப்பாற்றி உயிரைத் திரும்ப வழங்கிய குரங்குகளுக்கும், மான்களுக்கும் கண்ணீர் மல்க நன்றி கூறியது! நயவஞ்சகமாகப் பழகி மான் இனத்தை வேட்டையாடிப் புசித்தும், தன்னைப் பழி வாங்காமல் காப்பாற்றிய செயல் கண்டு அவற்றிடம் மன்னிப்பு கேட்டது.

தன் உயிர் உள்ளவரை தன் பலத்தை வைத்துக் கொண்டு எல்லா



உயிர்களுக்கும் தன்னாலான நன்மைகளைச் செய்வேன், தொந்தரவு செய்யமாட்டேன் எனக் கூறியது. அன்றிலிருந்து தனக்கு ஏற்பட்ட துன்பம் ஒரு பாடம் எனக் கருதி திருந்தி வாழவும் முடிவு செய்தது முரட்டுச் சிங்கம்.

## செயல்பாடுகள்

- மான்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருவதற்கான காரணம் என்ன?
- குரங்குகளும் மான்களும் சிங்கத்திற்கு உதவி செய்தன அல்லவா? இதைப் பற்றிய உங்கள் கருத்தைக் கலந்துரையாடி வெளியிடுங்கள்.
- நீங்கள் பிறருக்கு உதவிய ஓர் அனுபவத்தைக் கூறுங்கள்.
- முதலையிடமிருந்து உயிர் தப்பிய சிங்கம் என்ன முடிவு எடுத்தது? சொல்லுங்கள்.
- பொருத்தமான சொல்லைத் தேர்வு செய்து இணையுங்கள்.

| | | |
|---|---|---|
| • அடர்ந்த | = | கவனமாக |
| • வாழ்ந்து | = | செய்தது |
| • பாசம் | = | நெருங்கிய |
| • உலாவுதல் | = | வசித்து |
| • சேய் | = | அன்பு |
| • உன்னிப்பாக | = | நடத்தல் |
| • இழைத்தது | = | குழந்தை |



# செல்லமே செல்லம்!



## சிம்மியும் சிந்துவும்

அந்த வீட்டில் சிம்மி என்னும் ஒரு நாயும் சிந்து என்னும் பூனையும் வளர்ந்து வந்தன. சிம்மிக்காக அந்த வீட்டின் தாழ்வாரத்தில் தட்டு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதில் வைத்திடும் உணவைச் சாப்பிட்டுச் சிம்மி அங்கேயே படுத்துக்கொள்ளும்.

வெளியார் எவராவது அந்த வீட்டுக்கு வந்தால் குரைத்துக் கொண்டே ஓடும். சத்தம் கேட்டு வீட்டிலுள்ளோர் 'சிம்மி' என்று கூப்பிட்டால்தான் குரைப்பதை நிறுத்தும். சிம்மிக்குத் தெரியாமல் எதுவும் எவரும் வீட்டிற்குள் நுழைய முடியாது.

பூனை அந்த வீட்டுக்குள்ளேயே இருக்கும். அதற்கென ஒரு கிண்ணம். அதில் வைப்பதை உண்டு விட்டு, நாளுக்கொரு இடத்தில் படுத்துத் தூங்கிவிடும்.



எலி அந்த வீட்டுக்குள் வந்தால், பூனையைப் பார்த்ததும் தப்பித்தால் போதும் என்று தலை தெறிக்க ஓடிவிடும். பல்லிகள், கரப்பான் பூச்சிகள் பூனைக்கு அஞ்சி ஓடிவிடும். அதனால், அந்த வீட்டாருக்குப் பூச்சிகளின் பயம் இல்லை.

"ஒருநாள் தாழ்வாரத்துக்கு வந்த சிந்து சிம்மியைப் பார்த்துத் தாழ்வாரமே கதி என்று கிடக்கிறாய் எனக் கேலி செய்தது.

நான் வீட்டுக்குள் சுகமாகப் படுத்துத் தூங்குகிறேன். இந்த வீட்டில் உன்னை விடவும் எனக்குத்தான் மதிப்பு அதிகம்" என்றது.

"இந்த வீட்டுக்கு, உன் பணி உள் காவல்: என் பணி வெளிக்காவல். என் பணியின் அவசியம் பற்றிச் சந்தர்ப்பம் வரும்போது தெரிந்து கொள்வாய்" என்றது சிம்மி. எங்கோ இருந்து இரைதேடி வந்த நாகப்பாம்பு ஒன்று சிந்துவைக் கொத்திட வந்தது.

'சிம்மி! காப்பாற்று. சிம்மி... சிம்மி, காப்பாற்று...!! என்னும் சிந்துவின் அலறல் சத்தம் கேட்டது. திடுக்கிட்டு எழுந்த சிம்மி குரைத்துக் கொண்டே பாம்பை நோக்கிப் பாய்ந்தது.

சிம்மிக்கும் நாகத்துக்கும் கடுமையான சண்டை நடந்தது. இறுதியில் சிம்மி, நாகத்தைக் கடித்துக் குதறிக் கொன்றுவிட்டது.

ஆனால், அந்த நாகம் கடித்ததால் நச்சு ஏறி, சிம்மி மயங்கி தரையில் சாய்ந்தது.

வீட்டுக்குள்ளிருந்து ஓடி வந்தவர்கள் நடந்ததைப் புரிந்து கொண்டனர்.

சிம்மியை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். சிம்மி உயிர் பிழைத்து வீட்டுக்குத் திரும்பியது. தலையைத் திருப்பி சிந்துவைப் பார்த்தது.

"நீ இல்லேன்னா நான் செத்தே போயிருப்பேன்டா" என்றது சிந்து. வீட்டில் உள்ளோர் பொழுது போக்கிற்காக என்னுடன் விளையாடி அன்பு காட்டுகிறார்கள்.

ஆனால், நீ உன்னை வளர்க்கும் வீட்டாரையும் அவர்களது பிற உயிரினங்களையும் பொருட்களையும் பாதுகாக்கிறாய். உன் உயிருக்கு நீ அஞ்சுவதே இல்லை. எனவே அவர்கள் உன்மீது உண்மையான அன்பும் பாசமும் மதிப்பும் வைத்துள்ளார்கள். இதைக் காணும்போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. நீ எனக்குச் செய்த உதவிக்கு மிக்க நன்றி என்றது.

– புலேந்திரன்

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகளைப் பராமரித்துப் பாதுகாக்க வேண்டும். கலந்துரையாடி உங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.

## அதிசயக் குதிரை

கிருஷ்ண தேவராயரின் படைகளுள் குதிரைப் படையும் ஒன்று. இக்குதிரைப்படை வலிமையுள்ளதாக இருந்தது. சண்டை இல்லாத காலங்களில் குதிரைகளைப் பராமரிக்க மந்திரிகளில் ஒருவர் ஒரு யோசனை சொன்னார்.

அதாவது, ஒரு வீட்டிற்கு ஒரு குதிரையும் அதற்குத் தீனி போடுவதற்கு ஒரு குறிப்பிட்ட தொகையும் கொடுக்கப்பட்டது. அத்தொகையைப் பெற்றுக்கொண்டு குதிரையை நன்கு ஊட்டளித்து வளர்த்தனர். அதே போல் தெனாலிராமனுக்கும் ஒரு குதிரை கொடுக்கப்பட்டது. ஆனால், தெனாலிராமனோ ஒரு சிறிய கொட்டகையில் குதிரையை அடைத்து வைத்துப் புல் போடுவதற்கு மட்டுமே ஒரு சிறிய துவாரம் வைத்திருந்தான். அந்தத் துவாரத்தின் வழியாக புல்லை நீட்டியவுடன் குதிரை வெடுக்கென வாயால் கௌவிக் கொள்ளும். மிகவும் சிறிதளவு புல் மட்டுமே தினமும் போட்டு வந்தான். அதனால் அக்குதிரை எலும்பும் தோலுமாக நோஞ்சானாக இருந்தது.

குதிரைக்குத் தீனி வாங்கிப் போடும் பணத்தில் தெனாலிராமன் நன்கு உண்டு கொழுத்தான்.

ஒரு நாள் குதிரைகள் எப்படி இருக்கின்றன என்று காண அனைவருக்கும் செய்தி அனுப்பி, குதிரைகளை அரண்மனைக்கு வரவழைத்தார் மன்னர். அதன்படி குதிரைகள் அனைத்தும் அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டன. மன்னர் குதிரைகளைப் பார்வையிட்டார். குதிரைகள் அனைத்தும் மிக திருப்திகரமாக இருந்ததால் மன்னர் மகிழ்ச்சியடைந்தார்.



அங்கிருந்த தெனாலிராமனை அழைத்து "உன் குதிரையை ஏன் கொண்டு வரவில்லை?" என மன்னர் கேட்டார். அதற்குத் தெனாலிராமனோ "என் குதிரை மிகவும் முரட்டுத்தனமாக இருக்கிறது. அதை என்னால் அடக்க முடியவில்லை. அதனால் இங்கே





கொண்டு வரவில்லை." என்றான். "குதிரைப்படைத் தலைவரை என்னுடன் அனுப்புங்கள். அவரிடம் கொடுத்தனுப்புகிறேன்" என்றான். இதை உண்மையென்று நம்பிய மன்னர் குதிரைப்படைத் தலைவனைத் தெனாலிராமனுடன் அனுப்பினார்.

குதிரைப்படைத் தலைவருக்கு நீண்ட தாடியுண்டு. அவர் கொட்டகைத் துவாரத்தின் வழியாகக் குதிரையை எட்டிப் பார்த்தார். உடனே குதிரை அது புல்தான் என்று நினைத்து அவரது தாடியைக் கௌவிப் பிடித்துக் கொண்டது. வலி பொறுக்கமாட்டாத குதிரைப் படைத்தலைவர் எவ்வளவோ முயன்றும் தாடியைக் குதிரையிடமிருந்து விடுவிக்க முடியவில்லை. இச்செய்தி மன்னருக்கு எட்டியது. மன்னரும் உண்மையிலேயே இது முரட்டுக் குதிரையாகத்தான் இருக்கும் என்று எண்ணி தெனாலிராமன் வீட்டுக்கு விரைந்தார்.

அங்குக் குதிரையின் வாயில் குதிரைப்படைத் தலைவரின் தாடி சிக்கி இருப்பதை அறிந்து அந்தக் கொட்டகையைப் பிரிக்கச் செய்தார். பின் குதிரையைப் பார்த்தால் எலும்பும் தோலுமாக நிற்பதற்குக் கூட சக்தியற்று இருந்தது. மன்னர் கோபங்கொண்டு அதன் காரணத்தைத் தெனாலிராமனிடம் கேட்டார். அதற்குத் தெனாலிராமன் "இவ்வாறு சக்தியற்று இருக்கும் போதே குதிரைப் படைத்தலைவரின் தாடியைக் கௌவிக்கொண்டு விடமாட்டேன் என்கிறது. நன்கு உணவு ஊட்டி வளர்த்திருந்தால் குதிரைப்படைத் தலைவரின் கதி அதோகதிதான் ஆகி இருக்கும்" என்றான்.

இதைக் கேட்ட மன்னன் கோபத்திலும் சிரித்து விட்டார். பின்னர் தெனாலிராமனை மன்னித்து விட்டார்.

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் கருத்துகளைக் கூறுங்கள்.

- கதையை உங்களது சொந்த நடையில் கூறுங்கள்.
- வீட்டில் வளர்க்கும் உயிரினங்களுக்கு என்னென்ன வகையான உணவளிப்பீர்கள் என்பதைக் கலந்துரையாடிக் கருத்துகளைக் கூறுங்கள்.
- கதையில் உங்களுக்குப் பிடித்த பகுதி எது? ஏன்?

## எனது நண்பன்

செல்லப் பிராணிகளின் ஒவ்வொரு அசைவையும் கவனிக்க வேண்டும். மனிதர்களைப் போல அவற்றுக்கும் மகிழ்ச்சி, கவலை எனப் பல்வேறு உணர்ச்சிகள் உள்ளன. செல்லப் பிராணிகள் வழக்கமான சுறுசுறுப்புடன் செயல்படுகிறதா என்பதைத் தினமும் கவனியுங்கள். திடீரென்று சோம்பலாகவும் சோர்வுடனும் காணப்பட்டால், அதன் உடல்நலத்தில் ஏதாவது பிரச்சனை இருக்க வாய்ப்புள்ளது.

செல்லப் பிராணிகள் உணவு உட்கொள்ளாமலும் தண்ணீர் குடிக்காமலும் இருந்தால் அவற்றை உடனடியாக மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும். அவற்றின் உடலில் புண்கள், முடி உதிர்வு, காயங்கள் உள்ளதா? என்பதை அவ்வப்போது பரிசோதிக்க வேண்டும். செல்லப் பிராணிகளின் கண்களில் ஏற்படும் வெண்புள்ளி அல்லது நிறமாற்றம், பற்கள் மற்றும் ஈறுகளில் ஏற்படும் பாதிப்புகளை



மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுத் தகுந்த சிகிட்சைகளை உடனே செய்ய வேண்டும்.

சில சமயங்களில் உணவு ஒவ்வாமை, வானிலை அல்லது சுற்றுப்புறத்தில் ஏற்படும் மாற்றங்கள் கூட செல்லப் பிராணிகளின் உடல்நலத்தில் பாதிப்புகளை உண்டாக்கலாம்.

செல்லப் பிராணிகளுக்குக் குறிப்பிட்ட கால இடைவெளியில் தடுப்பூசி போட வேண்டும். மருத்துவர்களின் பரிந்துரை இல்லாமல் அவற்றுக்கு மருந்துகளைக் கொடுக்கக் கூடாது. அடிக்கடி கால்நடை மருத்துவரை மாற்றாமல், எப்போதும் ஒரே மருத்துவரிடம் செல்லப் பிராணிகளைப் பரிசோதனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். சில அடிப்படை மருத்துவப் பரிசோதனைகளை மருத்துவரின் ஆலோசனையின் பேரில் வீட்டிலேயே மேற்கொள்ள முடியும். இதற்காக, அதிக நேரம் செலவிட வேண்டிய அவசியம் கிடையாது.

செல்லப் பிராணிகளுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவும் சுகாதாரமான இருப்பிடமும் முக்கியமானவை. அவற்றுக்கு உணவு மற்றும் தண்ணீர் வைக்கும் கிண்ணங்கள் சுத்தமானதாக இருக்க வேண்டும். அவ்வப்போது அவற்றை இயற்கைச் சூழலில் நடைப்பயிற்சிக்குக் கூட்டிச் செல்வது நல்லது.

தேவதை

## செயல்பாடுகள்

- உங்கள் வீட்டுச் செல்லப் பிராணிகளை எவ்வாறு பராமரிப்பீர்கள். சொல்லுங்கள்.
- செல்லப் பிராணிகளிடமிருந்து நம்மை எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது என்பதை வகுப்பில் கலந்துரையாடிக் கருத்துகளைக் கூறுங்கள்.
- விடுபட்ட சரியான எழுத்துகளை அடைப்பிற்குள் இருந்து எடுத்து எழுதுங்கள்.
    - வா ......... க்கை (ள், ல், ழ்)
    - உ .........வளித்தல் (ன, ண, ந)
    - செல்.........ப்பிராணி (ழ, ல, ள)
    - ப ......... மரிப்பு (றா, லா, ரா)
    - கி .........ணங்கள் (ண், ன், ந)

சரியான கூற்றுக்கு (✓) அடையாளமும் தவறான கூற்றுக்கு (×) அடையாளமும் இடுங்கள்.

- மனிதர்களைப் போன்று உயிரினங்களுக்கும் கவலையும் மகிழ்ச்சியும் உண்டு. ☐
- உணவு ஒவ்வாமை, வானிலை ஆகியவற்றால் உயிரினங்களுக்குப் பாதிப்பு இல்லை. ☐
- செல்லப் பிராணிகளுக்குத் தடுப்பூசி போட வேண்டாம். ☐
- மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் மருந்துகளைக் கொடுக்கலாம். ☐
- செல்லப் பிராணிகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவும் சுகாதாரமான இடமும் தேவை. ☐
- செல்லப் பிராணிகளை நடைப்பயிற்சிக்கு அழைத்துச் செல்ல வேண்டும். ☐



## அலகு 6

# பழமையும் புதுமையும்



நாட்டின் வளர்ச்சிக்குக் கல்வி, போக்குவரத்து, பொருளாதாரம், சுகாதாரம் போன்றவை காரணமாகின்றன. இவற்றின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி எனலாம். இவற்றால் கல்வி நிலையங்களும் சாலைகளும் நலமான வாழ்வுக்குரிய வசதிகளும் விரிவடைந்துள்ளமையைப் பார்க்க முடிகின்றது. இந்நிலை தொடர வேண்டும்.

# மாற்றம்



## அந்த நாள்

அந்தநாள் சாலை இல்லை
அறிவியல் வளர்ச்சி இல்லை
சொந்தமாய்க் கார்கள் இல்லை
சோம்பேறி வாழ்க்கை இல்லை!

வரப்போகச் சாலை யில்லை
வாகன வசதி இல்லை
உரம்பெற்ற கால்கள் மட்டும்
ஊருக்கூர் நடந்து செல்லும்

நடந்துதான் சென்றார் ஆனால்
நல்லதோர் சாலை இல்லை
கடந்தது காலம், இந்நாள்
காண்கிறோம் எங்கும் சாலை!

"காங்கிரீட்டுச்" சாலை போட்டுக்
கண்ணாடி போலக் காத்துப்
பூங்கொடி, மரங்கள் வைத்துப்
போற்றிடும் காலம் இந்நாள்!

மலையினைக் குடைந்தும் சாலை
மண்ணுக்குள் சுரங்கச் சாலை
அலைமிகும் கடலுள் சாலை
அறிவியல் வளர்ச்சி காட்டும்!

அரு.சோமசுந்தரம்

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- பாடலை வாசித்துக் கருத்துகளைக் கூறுங்கள்.
- பண்டையகால தற்கால சாலை வசதிகளை எழுதுங்கள்.

| பண்டைக் காலம் | தற்காலம் |
|---|---|
| ........................................................ | ........................................................ |
| ........................................................ | ........................................................ |
| ........................................................ | ........................................................ |
| ........................................................ | ........................................................ |
| ........................................................ | ........................................................ |

- சரியான சொல்லுக்கு வட்டமிடுங்கள்.
  - சாளை சலை சாலை
  - வலர்ச்சி வளர்ச்சி வாளர்ச்சி
  - வாகனம் வகனம் வாகணம்
  - கண்ணடி கண்ணாடி கன்னடி
  - சுரங்கம் சுராங்கம் சுறங்கம்

- கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தை ஒழுங்குபடுத்தி எழுதுங்கள்.
  - வளர்ச்சி அறிவியல் இல்லை ........................................
  - சோம்பேறி இல்லை வாழ்க்கை ........................................
  - மட்டும் கால்கள் உரம்பெற்ற ........................................
  - குடைந்தும் மலையினைக் சாலை ........................................
  - சாலை கடலுள் அலைமிகும் ........................................

## சாலை வசதி

**அனுப்புநர்**

மாணவர் மன்றத் தலைவர்
மாணவர் மன்றம்
மூணார்.

**பெறுநர்**

பஞ்சாயத்துச் செயலர்
பஞ்சாயத்து அலுவலகம்
மூணார்.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : சாலை சீரமைக்கக் கோருதல் தொடர்பாக:–

வணக்கம். தங்கள் பஞ்சாயத்தின் கீழ் உள்ளது எங்கள் கிராமம். எங்கள் பகுதி மக்கள் மற்றும் மாணவர்கள் சார்பில் இந்த வேண்டுகோள் விண்ணப்பத்தைத் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

எங்கள் கிராமத்தை நகர்ப்புறத்துடன் இணைக்க ஒரே ஒரு சாலைதான் உள்ளது. அச்சாலையைப் பயன்படுத்தியே பொதுமக்களும், மாணவர்களாகிய நாங்களும் நகர்ப் புறத்திற்கும், பள்ளி, கல்லூரிகளுக்கும் சென்று வருகிறோம். அச்சாலை தற்போது மழை காரணமாக மிகவும் பழுதடைந்துள்ளது. அதனால் தினமும் ஒரு விபத்தாவது நடந்த வண்ணம் உள்ளது.

பழுதடைந்துள்ள இச்சாலையை விரைந்து செப்பனிட ஆவன செய்யுமாறு கிராம மக்கள் சார்பாகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

இடம் : மூணார்,
நாள் : 17–01–24.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
மாணவர் மன்றத் தலைவர்

உறைமேல் முகவரி
பஞ்சாயத்துச் செயலர் அவர்கள்,
பஞ்சாயத்து அலுவலகம்,
மூணார்.
685612.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியில் தரப்பட்டுள்ள விண்ணப்பத்தின் அமைப்பைக் கூறுங்கள்.
- விண்ணப்பத்தை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தித் தொடர்கள் உருவாக்குங்கள்.
  - அடிக்கடி ........................................................................
  - குண்டும் குழியும் .......................................................
  - தண்ணீர் ........................................................................
- சாலையைச் சீரமைத்துக் கொடுத்த பஞ்சாயத்துச் செயலாளருக்கு ஒரு நன்றிக் கடிதம் எழுதுங்கள்.

## போக்குவரத்து வாகனங்கள்

ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்துக்குச் சென்று திரும்புவது போக்குவரத்து எனப்படும். இது நடந்து செல்வதாகவும் இருக்கலாம். வாகனங்களில் செல்வதாகவும் இருக்கலாம்.

நடந்து சென்றால் குறிப்பிட்ட இடத்திற்கு வேகமாகவோ அவசரமாகவோ சிரமமின்றியோ செல்ல முடியாது. அதுவே வாகனம் மூலம் என்றால் வேகமாகவும் துரிதமாகவும் சிரமம் எதுவுமில்லாமலும் செல்லலாம்.

கால்நடைகள் பூட்டிய வண்டிகள், சைக்கிள், கார், பஸ், ரயில், கப்பல், விமானம் போன்ற வாகனங்களைப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்துகின்றனர்.

அதனால் இத்தகையவற்றைப் போக்குவரத்து வாகனங்கள் என்பர்.








இந்தப் போக்குவரத்தை மூன்று வகைகளாகப் பிரித்துக் கூறலாம். அவை தரைவழி, நீர்வழி, வான்வழி என்பனவாகும்.

தரைவழி என்பது ஆதிகாலம் முதற்கொண்டு இருந்து வருவதாகும். பண்டைக்கால மக்கள் தமக்குத் தேவையான பொருள்களைத் தம் தலை மீதோ முதுகிலோ தூக்கிச் சுமந்து சென்றனர்.

படிப்படியாக விலங்குகளைப் பழக்கக் கற்றுக் கொண்டனர். அதன் பிறகு மாடு, குதிரை, ஒட்டகம், கழுதை போன்ற விலங்குகளின் மீதேறிப் பயணம் செய்தனர்.

அடுத்து, சறுக்கு வண்டிகளைப் பயன்படுத்த முற்பட்டனர். பனி நிறைந்த பகுதிகளில் சறுக்கு வண்டியைப் பயன்படுத்துவது சுலபமாக இருந்தது. மற்ற இடங்களில் மிகச் சிரமமாக இருந்ததைக் கண்டனர்.

சக்கரங்களின் கண்டுபிடிப்பே அறிவியல் கண்டுபிடிப்பில் மகத்தானதாகும்.

சக்கரங்கள் பொருத்திய வண்டிகள், தேர்கள் போன்றவற்றைச் செய்து அவற்றில் விலங்குகளைப் பூட்டி இழுக்கச் செய்தனர்.

அதன் பிறகு போக்குவரத்துத் துறையில் மாற்றம் ஏற்பட்டது.








டீசல், பெட்ரோல் முதலான எரிபொருளில் இயங்கும் மோட்டார் வண்டிகளின் கண்டு பிடிப்பிற்குப் பிறகு துரித முன்னேற்றம் ஏற்பட்டது. பஸ், லாரி, மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் போன்ற பலவகையான மோட்டார் வண்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

தற்காலத்தில் உலகெங்கும் பலவகையான மோட்டார் வண்டிகள் பெருவாரியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

– செம்பு ஆறுமுகம்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கருத்துகளைக் கூறுங்கள்.
- பாடப்பகுதியில் வரும் வாகனங்களைப் பண்டைக்கால வாகனங்கள், தற்கால வாகனங்கள் எனப் பிரித்து எழுதுங்கள்.

| பண்டைக்கால வாகனங்கள் | தற்கால வாகனங்கள் |
|---|---|
| | |

- சக்கரம் கண்டுபிடிக்காவிட்டால் என்ன நிகழ்ந்திருக்கும்? கலந்துரையாடி கருத்தைக் கூறுங்கள்.



# பயணிகளின் கவனத்திற்கு



## குப் குப் ரயில் வண்டி

அம்மா நானோர் ரயில்வண்டி
        ஆகா ஜோராய்ச் செல்வதைப்பார்
சும்மா நீயும் வந்திடலாம்
        சுற்றியே எங்கும் பார்த்திடலாம்

'குப்குப் குப்குப்' போகுதுபார்
        குமுறியே புகையும் பொங்குதுபார்
'ஜக்ஜக் ஜக்ஜக்' போகுதுபார்
        'தடதட கடகட' ஓடுதுபார்

பச்சைக் கொடியைக் காட்டியதும்
        பலமாய்க் கூவிப் போகுதுபார்
இச்சைப் படிநீ சென்றிடலாம்
        ஏறுவாய் அம்மா மணியாச்சு

கைகளை மாற்றியே ஆட்டிடுவேன்
        கவனமாய் நானும் சென்றிடுவேன்
கையும் தணிந்தது வந்திடம்மா
        காற்றாய் நானும் பறந்திடுவேன்.

பெ. தூரன்

## செயல்பாடுகள்

- பாடலில் வரும் கருத்துகளைக் கூறுங்கள்.
- இரயில் வண்டி செல்வதைப் போன்று செய்கை செய்து பாடலைப் பாடுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தித் தொடர் அமையுங்கள்.

**எ.கா : ஜக் ஜக் : இரயில் வண்டி தண்டவாளத்தில் ஜக் ஜக் எனச் சென்றது.**

- குப் குப் : ..........................................................................
- தட தட : ..........................................................................
- கட கட : ..........................................................................
- மட மட : ..........................................................................
- பட பட : ..........................................................................
- சட சட : ..........................................................................
- சல சல : ..........................................................................

## நம்மை உணர்வோம்

புகை வண்டி செல்லாததால் தண்டவாளங்கள் இரண்டும் வெறிச்சோடிக் காணப்பட்டன. அந்த நேரத்தில் ஒரு தண்டவாளமானது மற்றொரு தண்டவாளத்தை நோக்கியது.

"நண்பனே! நாம் இருவரும் ஒன்றோடு ஒன்று சேர்ந்திருக்காமல் இப்படியே பிரிந்திருக்கின்றோமே! இதனை நினைக்கையில்தான் எனக்குக் கவலையாக இருக்கின்றது" என்றது.

அதனைக் கேட்ட மற்றொரு தண்டவாளமோ "நண்பனே! நாம் இருவரும் பிரிந்திருப்பது உண்மைதான். ஆனால் நாம் புகை வண்டியில் எத்தனையோ பயணிகளை ஒன்று சேர்க்கின்றோமே! அவர்கள் எல்லோரும் பயணத்தின் போது ஒரே குடும்பத்து மக்கள்



போல உரையாடிக் கொள்வார்கள். அதனால் அவர்களை ஒன்று சேர்க்கின்ற பாக்கியத்தை நாம் பெறுகின்றோம்" என்றது.

அதனைக் கேட்ட முதலாம் தண்டவாளம் "நண்பனே! நெடுநாட்களாக என் மனதுள் எழுந்துள்ள கேள்விக்கு நீ சரியானபடி விடையளித்து விட்டாய்! இதனைக் கேட்கின்றபோது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது" என்றது.



"நண்பனே! நாம் இன்னொரு பெரிய தொண்டையும் செய்து வருகிறோமே! அதனை நீ நினைத்துப் பார்க்கவில்லையென்று நினைக்கிறேன்" என்றது இரண்டாம் தண்டவாளம்.

"அது என்ன நண்பனே!" என்று வியப்போடு கேட்டது முதலாம் தண்டவாளம்.

"நண்பனே! நாம் இருவரும் புகைவண்டி ஓடப் பயன்படுகிறோம். புகைவண்டியோ மனிதர்களைச் சுமந்து சென்று உரிய இடத்தில் சேர்க்கின்றது. அதனால் அவர்கள் பயனடைகின்றார்கள். இப்படி பயன்தரும் செயலும் ஒருவகையில் பெரும் தொண்டுதானே! எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது நாம் தான். எனவே நம்மை நாமே உணர்வோம்" என்றது இரண்டாம் தண்டவாளம்.

– கே. நல்லசிவம்.

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துத் தண்டவாளத்தின் பெருமையைக் கூறுங்கள்.
- இரயிலின் பயன்களைக் குழுவில் கலந்துரையாடிக் கூறுங்கள். எழுதுங்கள்.

- தற்போது நமது நாட்டில் இரயில் போக்குவரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியைக் குறித்துக் கலந்துரையாடுங்கள் கூறுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான சொல்லை இணைத்து எழுதுங்கள்.
  - நோக்கி = பேசி
  - கவலை = ஆச்சரியம்
  - உரையாடி = நீண்டநாள்
  - நெடுநாள் = பார்த்து
  - வியப்பு = துக்கம்

## இயந்திரம் கண்ட இளைஞன்

ஜார்ஜ் ஸ்டிவென்ஸன் என்பவன் எட்டு வயது மாணவன். அவனது தகப்பனார் நிலக்கரிச் சுரங்கத்தில் இயந்திர ஓட்டியாக இருந்தார். ஜார்ஜ் அவருக்கு அடிக்கடி உணவு கொண்டு செல்வது வழக்கம். அவன் அப்பொழுது அந்த இயந்திரத்தைப் பார்ப்பது உண்டு.

ஜார்ஜின் மனம், இயந்திரம் செய்வதிலேயே ஊன்றி இருந்தது. அவன் களிமண் கொண்டு சிறிய இயந்திரங்களைச் செய்தான். அந்த மண் இயந்திரங்கள் உண்மை இயந்திரத்தைப் போலவே இருந்தன. அவன் மனம் படிப்பில் செல்லவில்லை.

அவனுக்கு எட்டு வயது ஆனதும் தகப்பனார் அவனைப் பள்ளிக்கூடத்திலிருந்து நிறுத்தி விட்டார்; சிறிய வேலைகளில் அமர்த்தினார்; ஆடுமாடுகளை மேய்க்கும் வேலை வழங்கப்பட்டது. அப்பொழுதும் ஜார்ஜ் மண் இயந்திரங்களைச் செய்துகொண்டே இருந்தான்.



'நான் என் ஆயுட்காலத்திற்குள் ஓர் இயந்திரத்தையேனும் கண்டுபிடிக்கவேண்டும். என் பெயர் உலகம் எல்லாம் பரவவேண்டும்' என்று அவ்விளைஞன் அடிக்கடி எண்ணுவது வழக்கம். அவன் எண்ணம் கைக்கூடும் சமயம் வந்தது.

அவன் தந்தையார் திடீரென்று ஒருநாள் இறந்துவிட்டார். அவரது வேலையில்

ஜார்ஜ் அமர்த்தப்பட்டான். அவன் அதன் பிறகு இயந்திரத்தின் பல பகுதிகளை ஆராய்ச்சி செய்து புதிய இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்தான். அதுதான் இரயில் வண்டி. இங்கிலாந்தில் முதன் முதலில் இரயிலை ஓட்டிக் காட்டிய பெருமகன் அவனே. அவன் பெயர் வாழ்க!

– மா. இராசமாணிக்கனார்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து ஜார்ஜ் ஸ்டிவென்ஸனைப் பற்றிக் கூறுங்கள்.
- களிமண்ணைக் கொண்டு உருவங்கள் செய்த அனுபவங்கள் உங்களுக்கு உண்டா? கூறுங்கள்.
- அட்டையில் இரயில் வண்டி செய்து வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் விடுபட்ட சொற்களைப் பாடப்பகுதியில் இருந்து கண்டுபிடித்து எழுதுங்கள்.
  - ஜார்ஜ் ஸ்டிவென்ஸன் ......................... மாணவன்.
  - தகப்பனார் ......................... சுரங்கப் பணியாளர்.
  - ஜார்ஜ் அவருக்கு அடிக்கடி ......................... கொண்டு செல்வார்.
  - ......................... சிறிய இயந்திரங்களைச் செய்தார்.
  - மண் இயந்திரங்கள் ...................... போலவே இருந்தன.
- கட்டத்தினுள் உள்ள வினாச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை முழுமையாக்குங்கள்.
  - ஜார்ஜ் ஸ்டிவென்ஸனின் வயது .........................?
  - தகப்பனார்......................... வேலை செய்தார்?
  - ஜார்ஜ் ஸ்டிவென்ஸன் .........................இயந்திரங்கள் செய்தார்?
  - ஆடுமாடுகளை மேய்த்தது.........................?
  - களிமண் இயந்திரங்கள் ......................... இருந்தன?
  - முதன் முதலில் இரயிலை ஓட்டியவர் .........................?

(ஏன், எவ்வாறு, எதனால், எங்கு, என்ன, எப்படி, யார், எத்தனை)



# கற்க கசடற



## அந்தக்காலம்! இந்தக்காலம்!

**தாத்தா**

சோற்று மூட்டை கட்டிக் கொண்டு
    தோளில் ஏட்டைச் சுமந்து கொண்டு
ஆற்றைக் கூடக் கடந்து சென்று
    அடுத்த நகரில் படித்து வந்தேன்

அந்தக் காலம் ––அது
அந்தக் காலம்.

காட்டு வழியைக் கடந்து சென்று
    கனத்த மழையில் நனைந்து கொண்டு
வீட்டை நோக்கி இரவில் வருவேன்
    விளக்கே இல்லா வீதி வழியே

அந்தக் காலம் – அது
அந்தக் காலம்.

அந்தக் காலம்–அது
அந்தக் காலம்.

அரிசி வாங்கப் பணமும் இன்றி
அடுப்பு மூட்ட வழியும் இன்றி
இருந்த போதும் சம்ப ளத்தை
எப்ப டியோ கட்டி வந்தேன்

அந்தக் காலம்–அது
அந்தக் காலம்,

ஐந்து வகுப்புப் படிப்ப தற்குள்
அதிகத் தொல்லை அடைந்த தாலே
அந்த வகுப்பில் தேர்வு பெற்றும்
அந்தோ! படிப்பை நிறுத்தி விட்டேன்

அந்தக் காலம்–அது
அந்தக் காலம்.

**பேரன்**

அதிக தூரம் நடந்தி டாமல்
அருகி லுள்ள பள்ளி சென்று
மதிய உணவும் உண்டு விட்டு
மகிழ்ச்சி யோடு கற்று வருவேன்

இந்தக் காலம் – இது
இந்தக் காலம்.

சீரு டையை அணிந்து கொண்டு
செல்வர் என்றும் ஏழை என்றும்
வேறு பாடே ஏதும் இன்றி
விருப்ப மோடு படித்து வருவேன்

இந்தக் காலம் – இது
இந்தக் காலம்.

இலவ சமாய்க் கல்வி உண்டு
இருந்து படிக்க வசதி உண்டு
கலக்க மின்றிக் கவலை யின்றிக்
கல்வி கற்றுத் திரும்பி வருவேன்

இந்தக் காலம் – இது
இந்தக் காலம்

பென்சில், நோட்டு, தேவை யான
புத்த கங்கள் போன்ற வற்றை
அன்பளிப்பாய்ப் பெற்று நானும்
ஆர்வத் தோடு கற்று வருவேன்

இந்தக் காலம் – இது
இந்தக் காலம்.

இன்னும் நிறையக் கல்வி கற்று
இனிய முறையில் தொழிலும் கற்று
நன்மை செய்வேன், நமது நாடு
நன்கு வளர, நானும் வளர்வேன்.

இந்தக் காலம் – இது
இந்தக் காலம்.

– அழ. வள்ளியப்பா

## செயல்பாடுகள்

- பாடலை இராகத்துடன் பாடுங்கள்.
- பாடலில் வரும் அந்தக்கால கருத்துகளையும் இந்தக் கால கருத்துகளையும் கலந்துரையாடிக் கூறுங்கள்.
- தாத்தாவும் பேரனும் பகுதிகளை இரண்டு குழுக்களாகப் பிரிந்து பாடி நடியுங்கள்.
- பிடித்த வரிகளை எழுதுங்கள் அதன் கருத்தைக் கூறுங்கள்.

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

- நீங்கள் தற்போது கல்வி கற்கும் வீட்டுச் சூழலையும் பள்ளிச் சூழலையும் கூறுங்கள்.

## நனைந்த புத்தகம்



அந்தப் பையனுக்குப் புத்தகம் படிப்பதில் அளவு கடந்த ஆசை. புத்தகம் வாங்கப் பணம் இல்லை என்றாலும் அவன் புத்தகம் படிக்கும் ஆசையை விட்டுவிடவில்லை. வெகுதூரம் நடந்து சென்று, நகரத்திலுள்ள சிலரிடம் கெஞ்சிக் கேட்டுச் சில புத்தகங்களை வாங்கி வருவான். படித்துவிட்டுப் பத்திரமாகத் திருப்பிக் கொடுப்பான்.

ஒரு நாள். 'ஜனாதிபதி வாஷிங்டன்' என்ற



புத்தகத்தை ஒருவரிடமிருந்து வாங்கி வந்தான். இரவிலே உட்கார்ந்து அதைப் படித்துக்கொண்டேயிருந்தான். வெகு நேரமாகியும் அவன் படிப்பை நிறுத்தவில்லை. ஆனால், விளக்கிலிருந்த எண்ணெய் தீர்ந்து விட்டது. எண்ணெய் இல்லாத போது இரவிலே எப்படிப் படிக்க முடியும்? ஆகையால் புத்தகத்தை ஜன்னல் ஓரமாக வைத்துவிட்டுப் படுத்தான். பின் நன்றாகத் தூங்கிவிட்டான்.

மறுநாள் புத்தகத்தைப் பார்த்ததும் அவன் திடுக்கிட்டான். காரணம், இரவு பெய்த மழையில் அந்தப் புத்தகம் நன்றாக நனைந்து போய்விட்டது. உடனே, அந்தப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு, அதன் சொந்தக்காரரிடம் சென்றான். நடந்தவற்றைக் கூறினான்.

உடனே அவர்," இந்தப் புத்தகத்தின் விலையை நீ தந்துவிட்டுத்தான் போக வேண்டும். அல்லது என் வயலில் நீ மூன்று நாட்கள் வேலை செய்யவேண்டும்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

சரி, அப்படியே செய்கிறேன். "இந்தப் புத்தகத்தை எனக்கே கொடுத்து விடுங்கள்" என்றான் அவன். அவரும் அதற்குச் சம்மதித்தார். அவருடைய வயலில் மூன்று நாட்களும் அந்தப் பையன் மாடாக உழைத்தான். நான்காவது நாள் அந்தப் புத்தகம் அவனுக்கே சொந்தமாகிவிட்டது. அப்போது அவன் அடைந்த ஆனந்தத்தை அளவிடவே முடியாது.

அமெரிக்க ஜனாதிபதி வாஷிங்டன் வாழ்க்கை வரலாற்றை ஆர்வமுடன் படித்த அந்தப் பையனும் பிற்காலத்தில் அமெரிக்காவின் ஜனாதிபதியாகிவிட்டான். ஆம். அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து அடிமை வியாபாரத்தை ஒழித்துக்கட்டிய ஆப்ரஹாம் லிங்கன்தான் அந்தப் பையன்!

– புத்தகப் பிரியன்



## செயல்பாடுகள்

- வாழ்க்கைக் குறிப்பை வாசித்து நிகழ்ச்சியைக் கூறுங்கள்.
- பள்ளி நூலகத்தைப் பயன்படுத்திய அனுபவம் உள்ளதா? உங்கள் அனுபவத்தைக் கூறுங்கள்?

- கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்களை எடுத்துக்காட்டைப் போன்று இணைத்து எழுதுங்கள்.

எ.கா : பாலன் உறங்கினான். பள்ளிக்குச் செல்லவில்லை.
பாலன் உறங்கியதால் பள்ளிக்குச் செல்லவில்லை.

அ) பணம் இல்லை. புத்தகம் வாங்கவில்லை

..........................................................................................

ஆ) எண்ணெய் இல்லை. விளக்கு எரியவில்லை

..........................................................................................

இ) மழை பெய்தது. புத்தகம் நனைந்தது

..........................................................................................

ஈ) வேலை கிடைக்கவில்லை. வயலில் வேலை செய்தான்

..........................................................................................

உ) பையன் உழைத்தான். புத்தகம் கிடைத்தது.

..........................................................................................

- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை எடுத்துக்காட்டைப் போன்று மாற்றி எழுதுங்கள்.

எ.கா :

| | | | |
|---|---|---|---|
| **வந்தான் :** | வந்தான் | வருகிறான் | வருவான் |
| • படித்தான் : | .................... | .................... | .................... |
| • கொடுத்தான்: | .................... | .................... | .................... |
| • படுத்தான் : | .................... | .................... | .................... |
| • பார்த்தான் : | .................... | .................... | .................... |
| • உழைத்தான் : | .................... | .................... | .................... |

## எண்ணும் எழுத்தும்

கண்கள் இரண்டும் விளக்காக
கல்வியைக் கற்றிட வேண்டாமா?
கல்லா மனிதன் கல்லென்ற
கருத்தை மாற்றிட வேண்டாமா?

இன்னும் எதற்கோ அறியாமை
இன்றே போக்கிட வேண்டாமா?
இருப்போர் – இல்லார் எல்லாமே
இனிதாய்ப் படித்திட வேண்டாமா?

பொன்னும் பொருளும் இருந்தாலும்
எண்ணும் எழுத்தும் கண்ணாகும்!
பொறுப்பாய் உணர்ந்து படிக்காவிட்டால்
பிறந்த வாழ்வே புண்ணாகும்!

பண்பும் அறிவும் படிப்பால் பெருகும்;
பாமரம் இனிமேல் வேண்டாமே!
பள்ளிகள், கல்வியை அரசும் தருதே
படித்திடவே நீ தவறாதே!

வெ. தமிழழகன்



## செயல்பாடுகள்

- பாடலைப் பாடுங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.
- கல்வி கற்பதன் முக்கியத்துவத்தைக் கூறுங்கள்.
- உங்கள் பள்ளிக்கூடத்தைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

- பாடலில் முதல் எழுத்து ஒரே போன்று வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

| | |
|---|---|
| • ...................................... | • ...................................... |
| • ...................................... | • ...................................... |
| • ...................................... | • ...................................... |

- பாடலில் இரண்டாம் எழுத்து ஒரே போன்று வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

| | |
|---|---|
| • ...................................... | • ...................................... |
| • ...................................... | • ...................................... |
| • ...................................... | • ...................................... |



## அலகு 7

# தொழிலும் வாழ்வும்



நமது நாட்டில் பலவகையான தொழில்கள் உள்ளன. அவற்றுள் சிறுதொழில்களும் குடிசைத் தொழில்களும் அடங்கும். 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்' என்ற பாடல் வரிக்கு ஏற்ப கல்வியுடன் தொழிலையும் கற்றுக்கொண்டால் தன்னம்பிக்கையோடு வாழலாம்.

# உழைப்போம் உயர்வோம்



## அதிசய வேலையாட்கள்

**தந்தை**

இட்ட வேலை யாவையும்
தட்டி டாமல் செய்பவர்
வெட்டி யாகப் பொழுதினை
வீண டிக்க விரும்பிடார்

சின்னப் பிள்ளை ஆடிட
சிரிக்கும் பொம்மை பண்ணுவார்
தின்னப் பட்ச ணங்களும்
திகட்ட திகட்டப் பண்ணுவார்

சாலை போட உதவுவார்
சோலை அழகும் செய்குவார்
ஆலை தன்னில் இயந்திரம்
அதையும் எளிதில் செய்குவார்



வயல்கள் தன்னைப் பார்த்திடு
வளர்ந்த பயிர்கள் கூறுமே
அயர்வு இன்றி இவர்களும்
அல்லும் பகலும் உழைப்பதை



சட்டைத் துணிகள் தைக்கிறார்
சட்டி பானை செய்கிறார்
கட்டி விரைவில் முடிக்கிறார்
எட்டு மாடிக் கட்டடம்

**மகன்**

விந்தை! விந்தை! இவர்கள் போல்
வேலை யாட்கள் எவரையும்
தந்தை யேநான் இதுவரை
கண்ட தில்லை யாரிவர்?

**தந்தை**

பிறக்கும் போதே மனிதர்கள்
பிழைத்துக் கொள்ள வேண்டியே
இறைவன் தந்த நல்லவரம்
இந்த வேலை யாட்களாம்!

பத்து விரல்கள் கைகளில்
பத்து விரல்கள் கால்களில்
வித்தை யாவும் செய்திடும்
வேலை யாட்கள் ஆகுமே!

– விஜயலட்சுமி

## செயல்பாடுகள்

- கவிதையை இராகத்துடன் பாடுங்கள்.
- பாடலை வாசித்துப் பிடித்த வரிகளைக் கூறுங்கள்.
- கை, கால் விரல்களின் உதவியுடன் வேறு என்னென்ன தொழில்களைச் செய்கின்றனர் என்பதைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

.................................... ....................................

.................................... ....................................

.................................... ....................................

- தொழில் செய்பவர்களின் பெயர்களை எழுதுங்கள்.
  - கட்டடம் கட்டுபவர் ..................................
  - மரவேலை செய்பவர் ..................................
  - வாகனம் ஓட்டுபவர் ..................................
  - சட்டைத் துணிகள் தைப்பவர் ..................................
  - சட்டி, பானை செய்பவர் ..................................

## வயலுக்குப் போவோமா?

ஓர் அழகான குறும்புக்கார காகம். அது மேலே பறக்கும்..... கீழே பறக்கும்...... மரத்தில் மாறும்..... புல்வெளியில் அமரும். அந்தக் காகத்தின் பெயர் சின்னு. நண்பர்களுடன் சேர்ந்தே உண்ணும் விளையாடும். சின்னுவை அனைத்துக் காகங்களுக்கும் பிடிக்கும்.

ஐ! இலை நிறைய சோறு. இன்று நல்ல விருந்துதான், சரி.... சரி.... நண்பர்களை அழைப்போம். அவர்களோடு சேர்ந்து உண்ணலாம்.

சின்னுவும் அதன் நண்பர்களும் வயிறு நிறைய உண்டனர். அப்போது சின்னுவுக்கு ஓர் ஐயம் வந்தது. தனது ஐயத்தைக் கேட்க அம்மாவை நோக்கிச் சென்றது.



அம்மா........ சோறு எதிலிருந்து வரும்?

சோறு அரிசியிலிருந்து வரும்.

அரிசி எதிலிருந்து வரும்?

நெல்லிலிருந்து வரும்

நெல் எதிலிருந்து வரும்?

இப்போதே என்னுடன் வா.... தெரிந்து கொள்வாய்.

சின்னுவும் அம்மாவும் வயல்வெளிக்குச் சென்றனர்.

சின்னு உனது ஐயத்தை உழவர் ஐயாவிடம் கேட்டுத் தெரிந்துகொள்.

வணக்கம் ஐயா! நெல்லை எப்படி விளைவிப்பீர்கள் ?

முதலில் நாற்றங்காலைப் பதப்படுத்த வேண்டும். விதை நெல்லை நாற்றங்காலில் விதைக்க வேண்டும். நாற்றுகள் வளரும் வரை நீர்ப்பாய்ச்ச வேண்டும்......

நாற்றுகள் வளர்ந்ததும் வயலில் நீர்ப்பாய்ச்சி, உழவு ஓட்ட வேண்டும். பிறகு பரம்பு ஓட்டி வயலைச் சமப்படுத்த வேண்டும்......

ஓ! இவ்வளவு வேலைகள் இருக்கின்றனவா?



ஆமாம். நாற்றுகளைப் பிடுங்கி வயலில் நட வேண்டும். தொடர்ந்து நீர்ப்பாய்ச்ச வேண்டும்..........

பயிர்கள் சிறிது வளர்ந்ததும் களை பறிக்க வேண்டும். நெற்பயிர்கள் வளர்ந்த பின்பு நெற்கதிர் வந்து, பால் பிடித்து நெல்மணிகள் வரும்.......

அப்படியா இப்போதாவது நெல் கிடைத்து விடுமா?

இல்லை...... இல்லை...... இன்னும் அடுத்த நிலைகள் உள்ளன.

இந்த வயலைப் பார்க்கவே அழகாக உள்ளதே. நெல் கிடைப்பதற்குள் இவ்வளவு நிலைகளா! கேட்கவே வியப்பாக இருக்கிறது ஐயா!

நெல்மணிகள் முற்றியதும் அறுவடைதான்

இதோ! நெற்பயிரிலிருந்து நெல்லைப் பிரிக்கிறார்கள் பார். உன் அலகில் கொத்திக் கொண்டு போ காக்கையே!

உங்களை நினைத்தால் பெருமையாக உள்ளது. வருகிறேன் ஐயா!

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து உங்கள் கருத்தைக் கூறுங்கள்.

- வரிசைப்படுத்துங்கள்.
  - நாற்றுகள் வளர்ந்ததும் வயலில் நீர்ப்பாய்ச்சுதல்
  - களை பறிக்க வேண்டும்
  - நெற்பயிரிலிருந்து நெல்லைப் பிரிக்கிறார்கள்
  - பரம்பு ஓட்டி வயலைச் சமப்படுத்தல்
  - அறுவடை
  - நாற்று நடுதல்
  - விதை விதைத்தல்

- பொருத்தமான சொல்லை எழுதுங்கள்.
  - நிலத்தில் நிற்பது ............................ (மரம், மறம்)
  - பயிர் விளையத் தேவை ......................... (மலை, மழை)
  - செடியில் இருப்பது ............................ (இழை, இலை)
  - வயலில் நீக்குவது ............................ (கலை, களை)
  - விவசாயி செய்வது ........................ (வேலை, வேளை)



# பனையும் மனையும்



## பனை மரமே பனை மரமே

பனை மரமே! பனை மரமே!
ஏன் வளர்ந்தாய் பனை மரமே!
நான் வளர்ந்த காரணத்தை
நண்பர்களே! சொல்லுகிறேன்.

படுக்க நல்ல பாயாவேன்:
பஞ்சணைக்கு நாராவேன்;
அடுக்கடுக்காய்ப் பானைகளை
அடுக்கி வைக்க உறியாவேன்.

சித்திரை நல் கோடையிலே
சிறந்த நுங்கை நான்தருவேன்
எத்திசையில் உள்ளவர்க்கும்
இயலுதவி செய்திடுவேன்.

பசித்து வந்த மக்களுக்குப்
பனம் பழமும் தந்திடுவேன்.
புசிக்க நல்ல கிழங்காவேன்
புது விசிறியாகி உதவிடுவேன்.

என்னைப் போல் யாவருமே
இயலுதவி செய்வீரேல்
பொன்னைப் போல் எல்லாரும்
போற்றிடவே வாழ்ந்திடலாம்.

## செயல்பாடுகள்

- பிடித்த வரிகளைக் காரணத்துடன் கூறுங்கள்.
- பனை மரம் தன்னைப்பற்றிக் கூறியதைக் குறிப்பாக எழுதுங்கள்.
- பனை மரம் கூறியது போல் 'தென்னை மரம்' என்னென்ன கூறியிருக்கும்?
- பனை மரத்திலிருந்து உற்பத்திச் செய்யப்படும் பயனுள்ள பொருள்களை எழுதுங்கள்.
  - விசிறி
  - ..........................
  - ..........................
  - ..........................
- "வேன்" என்ற எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குங்கள்.

  **எ.கா : உதவிடுவேன்**

  - ................................
  - ................................
  - ................................
  - ................................
  - ................................




- பாடப்பகுதியை வாசித்துச் சரியான வாக்கியம் எழுதுங்கள்
  - நுங்கை/ சிறந்த/ நான் தருவேன்

    ...........................................................................
  - தந்திடுவேன்/ பழமும்/ பனம்

    ...........................................................................
  - உறியாவேன்/ அடுக்கி/ வைக்க

    ...........................................................................

## பனைமரமும் பச்சைக் கிளியும்

தெற்கு காரசேரி எனும் கரிசல்காட்டுப் பகுதியில், ஒரு பனைமரம் இருந்தது. அதன் உடல் கறுப்பாகவும் ஓலைகள் பச்சைப் பசேல் என்றும் இருந்ததால் அந்தப் பனைமரம் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது.



பலவிதமான பறவைகள் அந்தப் பனைமரத்தில் வந்து தங்கிச் செல்லும். ஆனால் ஓர் அழகான பச்சைக்கிளி மட்டும் அந்தப் பனைமரத்துடன் பாசத்தோடு பழகியது. இரை தேடிச்செல்லும் சமயங்கள் தவிர, மற்ற நேரங்களில் அந்தப் பச்சைக்கிளி பனைமரத்திலேயே தங்கும்.

பனைமரமும் பச்சைக்கிளியும் மனந்திறந்து பேசி மகிழும். கிளி இரை தேடும்போது ஏற்படும் அனுபவங்களைப் பனைமரத்தோடு பகிர்ந்து கொள்ளும். அந்த அனுபவங்கள் பனை மரத்தை மெய்சிலிர்க்கச் செய்யும்.

ஒரு நாள் வேடன் ஒருவன் விரித்த வலையில் சிக்கவேண்டிய நிலையில், பச்சைக்கிளி அதிலிருந்து நூலிழையில் தப்பித்து வந்தது. அந்த அனுபவத்தைக் கிளி சொல்லக் கேட்டதும் பனைமரம் பதறியது.

கிளியே, கிளியே, உனக்கு ஏதாவது ஒன்று என்றால் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. இனிமேல் இரை தேடிச் செல்லும்போது கவனமாகப் போய் வரவேண்டும் என்று ஆலோசனையும் சொன்னது பனைமரம்.

இரை தேடிச் செல்லும்போது கிடைக்கும் அழகிய பழங்களைக் கிளி பனைமரத்திற்குக் கொண்டுவந்து கொடுக்கும். பனைமரமும் அந்தப் பழங்களை ஆசையோடு தின்று மகிழும். "கடவுள், உன்னைப்போல எனக்கும் இறக்கைகள் கொடுத்திருந்தால் நானும் வானில் பறந்து வட்டமடிப்பேன்" என்ற தன்னுடைய ஆசையைக் கிளியிடம் அடிக்கடி பனைமரம் சொல்லும். தன் இனிய பதநீரைக் கிளிக்குக் கொடுத்து மகிழும்.

ஒரு நாள் கிளி இரை தேடிச் சென்றபோது தன் அணில் நண்பனைத் தன்னுடன் அழைத்து வந்து பனைமரத்திடம் அறிமுகம் செய்து வைத்தது. அணிலும் பனைமரமும் நீண்டநேரம் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தன. தன்னிடமுள்ள இளம் நுங்குகளை

அணிலுக்குக் கொடுத்தது. அணிலும் நுங்கை ரசித்து ருசித்தது. மகிழ்ந்தது பனைமரம்.

ருசியான நுங்கைச் சுமக்கும் நீ உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவன். உன் உடல் கறுப்பு என்றாலும் உள்ளம் வெள்ளை என்று புகழ்ந்தது அணில். பின்பு, பனைமரத்திடமிருந்து பிரியாவிடை பெற்றது.





ஒரு நாள் கிளி, பனைமரத்துக்குத் திரும்ப வெகுநேரமாகிவிட்டது. வெளிச்சம் மங்கி இரவாகத் தொடங்கியது. கிளியைக் காணாத பனைமரத்துக்கு அழுகை வந்தது. வெகுநேரம் கழித்து வந்த கிளியைப் பார்த்த பின்புதான் வாடியிருந்த அதன் முகம் மலர்ந்தது.

"ஏன் இவ்வளவு நேரம்?" எனக் கேட்டது பனைமரம்

"உனக்காக அத்திப்பழங்களைக் கொண்டுவர வெகுதூரம் போய்விட்டேன். அதனால் நேரமாகிவிட்டது" என்றது கிளி. இனிமேல் இப்படியெல்லாம் செய்யக்கூடாது என்ற பனைமரம், கிளி கொடுத்த அத்திப்பழங்களை ஆவலோடு உண்டது.

– எஸ். டேனியல் ஜூலியட்

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் கதாபாத்திரங்களைக் கூறுங்கள்.
- உங்களுக்குப் பிடித்த கதாபாத்திரம் எது? ஏன் ? கூறுங்கள்.

- "எனக்கு இறக்கைகள் கொடுத்திருந்தால்" – பனைமரம் என்னென்ன கூறியிருக்கும்? கலந்துரையாடி எழுதுங்கள்.

- யாருக்கு யார் ............................... கண்டுபிடியுங்கள்.

| | |
|---|---|
| ஓர் | கிளி<br>மரம்<br>அணில்<br>அரசன் |
| ஒரு | நாள்<br>அழகான<br>ஊர்<br>நுங்கு |

- பாடப்பகுதியை வாசித்து நடித்துக் காட்டுங்கள்.

- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தித் தொடர் அமையுங்கள்.
  - பச்சைப் பசேல் : ..............................................
  - அழுகை அழுகையாய் : ..............................................
  - ஆசை ஆசையாய் : ..............................................
  - பேசிப் பேசி : ..............................................
  - ரசித்து ரசித்து : ..............................................

## பல்லுயிர் காக்கும் பனை

பனைமரம் மனிதனுக்கு மட்டுமன்றி பல்லுயிர்களுக்கும் பயன் தருகின்றது. பனையின் வேர்ப்பகுதிகளில் எறும்புகளும் பூச்சிகளும் வாழ்கின்றன. பல சிறு செடிகளும் வளர்கின்றன. பனைமரத்தில் அமரும் பறவைகளின் எச்சத்தால் பனையின் வேர்ப்பகுதியில் விழும் தாவரங்களின் விதைகள் பனையைச் சுற்றியும் ஒட்டியும்



வளர்கின்றன. இயற்கையில் ஆலமரங்களும் அரச மரங்களும் பெரும்பாலும் பனையை ஒட்டி வளர்பவையே.

பனையின் தண்டுப் பகுதியை ஆதாரமாகக் கொண்டு பலவகையான ஓணான்களும் பல்லி இனங்களும் வாழ்கின்றன. பனையின் கழுத்துப் பகுதிகளிலும் பனை ஓலைகளிலும் பல வகையான வௌவால்களும் சிறு குருவிகளும் வாழ்கின்றன. ஒரு வௌவால் ஓர் இரவுப் பொழுதில் நூற்றுக்கணக்கான ஈக்களையும் கொசுக்களையும் பிடித்து உட்கொண்டு விவசாயம் செழிக்க நமக்கு உதவுகிறது.



பனைமரத்தின் தலைப்பகுதியில் அணில்களும் எலிகளும் கூடு அமைத்து வாழ்கின்றன. மேலும் உயரப் பறக்கும் பறவைகளான பருந்துகளுக்கும் வானம்பாடிப் பறவைகளுக்கும் இருப்பிடமாக பனை விளங்குகிறது. பனை ஓலையின் நுனியில் தூக்கணாங்குருவிகள் தங்களின் சிறப்புமிக்க கூடுகளைப் பெருமளவு அமைத்துக் கூட்டாக வாழ்கின்றன. பகல் பொழுதில் வயல்களில் இருக்கின்ற பூச்சிகளையும் கூட்டுப்புழுக்களையும் உண்டு விவசாயத்திற்குப் பல நன்மைகளைச் செய்கின்றன.

பனை மரம் குறைந்தது 30 அடி உயரத்திற்கு வளருமாதலால் பல உயிரினங்களுக்கு இருப்பிடங்களாகவும் கூடுகளை அமைத்துத் தங்களது இனத்தை விருத்திச் செய்யவும் எதிரிகளிடமிருந்து காக்க உதவும் அரணாகவும் விளங்குகிறது.

இன்றைய நாகரிக வளர்ச்சியில் பல்வேறு காரணங்களுக்காகக் காடுகள் பெருமளவிற்கு அழிக்கப்பட்டுவிட்டதால் பல உயிரினங்களின் உயிர் ஆதாரமாக பனைமரங்களே விளங்குகின்றன.

– சோ. அண்ணாத்துரை

## செயல்பாடுகள்

**பாடப்பகுதியை வாசியுங்கள்**

- பனை மரத்தைச் சார்ந்து வாழும் உயிரினங்களைக் கண்டுபிடியுங்கள். எழுதுங்கள்.
  - ……………………………….
  - ……………………………….
  - ……………………………….
  - ……………………………….
  - ……………………………….
  - ……………………………….

- அடைப்புக் குறியைப் பயன்படுத்திக் கண்டுபிடிப்போம் எழுதுவோம்.
  - பனைமரம் மனிதனுக்கு மட்டுமன்றி ........................ களுக்கும் பயன் தருகிறது.
  - பெரும்பாலும் பனையை ஒட்டி வளர்பவை ...................
  - பனைமரத்தின் தலைப்பகுதியில் ........................ கூடு அமைத்து வாழ்கின்றது.
  - பனை ஓலையின் நுனியில் ...................... கூடு கட்டும்.

(தூக்கணாங்குருவி, பல்லுயிர், அணில்,
ஆலமரம், எலி, அரசமரம்)

- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி வளரும் வாக்கியங்கள் எழுதுங்கள்.

பனை

பனைமரம்

.................. .................. ..................

.................. .................. .................. ..................

.................. .................. .................. .................. ..................

- கட்டுரையை வாசித்து மையக்கருத்தை எழுதுங்கள்.



# வாழ்வுக்கு வழி



## தேடல்

கேரள மாநிலம் பாலக்காட்டிலுள்ள தனது அலுவலகத்தில் அன்றைய நாளுக்கான பணிகளைத் திட்டமிட்டுக்கொண்டிருந்த மரியாவிடம் பேசினோம்.

"எனது சொந்த ஊர் கேரள மாநிலம் திருச்சூர். பள்ளி வகுப்புகளை அங்கேயே முடித்துவிட்டேன். மும்பையின் இயந்திரத் தனமான சூழல் ரொம்பவே போரடிக்க ஆரம்பித்தது. சொந்தமாக தொழில் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் ஓடிக் கொண்டிருந்தது. அதுவும் சொந்த ஊரில் செய்தால் இன்னும் நன்றாக இருக்குமென்று நினைத்தேன்.

கேரளம் என்றாலே தென்னை மரங்களும் தேங்காயும்தான் எல்லோரது நினைவிற்கும் வரும். தேங்காய்ச் சிரட்டைகளைக் கலைப்பொருட்களாகத் தயாரித்து விற்பனைச் செய்யலாமே என்ற எண்ணம் உருவானது."

"கேரளத்தில் தேங்காய்க்கென எப்போதுமே சீசன் உண்டு. வருடம் முழுவதும் தட்டுப்பாடில்லாமல் கிடைக்கும். பெரும்பாலும் தேங்காய்ச் சிரட்டைகளைப் பயன்படுத்தத் தொடங்கும் போது, அதன் மீதிருக்கும் நார்ப்பகுதிகளைச் சுத்தமாக நீக்கிக் காய வைப்போம். வெயிலில் காய வைக்காமல் நிழலில், குளிர்ச்சியான சூழலில் அதனைப் பதப்படுத்த

வேண்டும். வெயிலில் காய வைத்தால் ஈரப்பதம் முழுவதும் வெளியேறி வீணாகிவிடும். முதன்முதலில் சிறிய அளவிலான கரண்டிகள் செய்து பரிசோதனை செய்தோம். இதற்கு நன்றாக வரவேற்பு இருந்தது. அடுத்த சில நாட்களில் 100 கரண்டிகளுக்கான 'ஆர்டர்' கிடைத்த போது நானும் குடும்பத்தாரும் மிகவும் உற்சாகமானோம்"



"அடுத்து வந்த நாட்களில் ஸ்பூன், கரண்டி, மெழுகுவர்த்தி ஸ்டான்ட், கப் அன்ட் சாஸர், கிண்ணங்கள் போன்றவற்றைச் செய்ய ஆரம்பித்தேன். கலைப் பொருள் தயாரிப்பதற்குப் பெரும்பாலும் அரைமூடித் தேங்காய்ச் சிரட்டைகளே போதுமானது. கப், கிண்ணங்கள் போன்ற பெரிய அளவிலான பொருட்களைத் தயாரிக்க கொப்பரைத் தேங்காய்கள் வேண்டும். அதற்கு மொத்தமாக தேங்காய்களாக வாங்கிக் கொள்கிறோம். தேங்காயின் பகுதிகளைப் பிரித்தெடுத்து விட்டுச் சிரட்டைகளைக் கலைப்பொருட்களுக்காக உபயோகித்துக் கொள்கிறோம். தேங்காய்ச் சிரட்டைகளை டிரில்லிங் மெஷின் கொண்டு பளபளப்பாக மாற்றி இயற்கை முறையிலான வர்ணங்கள் பூசிக் காயவைத்துப் பக்குவமாகத் தயார் செய்கிறோம்"

– அனுராதா ஆர்.கே

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துத் தேங்காய்ச் சிரட்டையின் பயன்களைக் கூறுங்கள். எழுதுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்றொடர்களை வாசித்துப் பொருள் புரிந்து, சரியாக எழுதுங்கள்.

- என துசொ ந்தஊ ர்கேர ளம்

  ..........................................................................

- சொ ந்தமா கதொ ழில்செ ய்யவே ண்டும்

  ..........................................................................

- வெயி லில்கா யவைக்க லாம்

  ..........................................................................

- கலைப்பொ ருட்களைவி ற்பனைசெ ய்யலாம்

  ..........................................................................

- வருட ம்முழு க்கதட்டுப் பாடில் லாமல்கி டைக்கும்

..........................................................................

- தொழில்கள் தொடர்பான படங்களைத் திரட்டுங்கள்/ தொகுப்பாக்குங்கள்.
- படங்களுக்குப் பொருத்தமான சொற்களை எழுதுங்கள். கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.

-  இல்லாமல் ..................... இல்லை

-  இல்லாமல் ..................... இல்லை

-  இல்லாமல் ..................... இல்லை

-  இல்லாமல் ..................... இல்லை

விவசாயம், தேங்காய் எண்ணெய்,
இளநீர், நுங்கு

## நெசவுத் தொழிலைப் போற்றுவோம்

பள்ளியிலிருந்து வீடு திரும்பியிருந்தாள் வள்ளி. அம்மா தறி நெய்து கொண்டிருந்தாள். வேலையில் மும்முரமாயிருந்தாள். மகள் வந்ததைக் கவனிக்கவில்லை.

வள்ளி தட்டுமுட்டுச் சாமான்களையெல்லாம் உருட்டினாள். அவள் கைகளுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

"அம்மா..." என இரைந்தாள்.

அம்மா இப்போதுதான் நிமிர்ந்து பார்த்தாள்.

"வள்ளி... பள்ளி முடிஞ்சு வந்துட்டியா? எப்ப வந்தே என்று கேட்டாள்.

"ஆமா அதெல்லாம் உனக்குக் கண்ணுக்குத் தெரியாது… எப்பப்பாரு தறியைக் கட்டிக்கிட்டே அழு... எனக்குத் தின்பண்டம் எதுவும் இல்லையா?" என்று கேட்டாள்.

"வள்ளி எனக்கு வேலை நிறைய இருந்துச்சு... அதனால் கடைக்குப் போக முடியலை... நீ போய் ஏதாவது வாங்கிக்க. டப்பாவுல காசு வச்சிருக்கேன் எடுத்துக்க..." என்றாள்.

அம்மாவை முறைத்தபடி டப்பாவில் இருந்து காசை எடுத்துக் கொண்டு வெளியேறினாள் வள்ளி.

சிறிது நேரம் கழித்து வீட்டிற்கு வந்தாள். அம்மா அவளைக் கூப்பிட்டாள்.



'வள்ளி இங்கே வாயேன்...' என்றாள்.

"என்ன?" என்றபடி விறைப்பாய் அவள் அருகில் சென்று நின்றாள் வள்ளி.

"வள்ளி... தார் கண்டு இல்லை... தார் சுத்தற பாட்டி வரலை... அந்த நூலைத் தார்ல வச்சு கொஞ்சம் சுத்தித்தர்றியா"

"போம்மா... உனக்கு வேற வேலையே இல்லை. எனக்கு நிறைய படிக்க வேண்டியிருக்கு என்றாள் வள்ளி...

நாளைக்கு உனக்குப் பள்ளிப் பணம் கட்டணும்னு சொன்னியே! கொஞ்சம் அம்மாவுக்கு உதவி பண்ணு அம்மா கெஞ்சினாள்.

அதெல்லாம் முடியாது... நீதான் நாளெல்லாம் தறியில் கிடந்து சாகற... நானும் தறி அடிக்கத்தான் லாயக்கன்னு சொல்ற போலிருக்கு... என்னால முடியாது போ என்றாள்.

பிறகு அம்மா வெளியே எடுத்து வந்து தார் சுற்றி, கண்டு எடுத்துக்கொண்டு, மறுபடியும் தறியில் இறங்கி வேலை பார்த்தாள்.

மறுநாள் பள்ளியில் வகுப்பாசிரியை பாடம் நடத்தும் போது, "உழவுக்கும் நெசவுக்கும் வந்தனை செய்வோம்னு சொல்லியிருக்காங்க... உலகில் உள்ள தொழில்களிலேயே உழவுத்தொழிலும் நெசவுத் தொழிலும்தான் மேன்மையான தொழில்கள். உழவர்களும் நெசவுத் தொழில் செய்பவர்களும் வணங்கத்தக்கவர்கள். உழவுத் தொழில் செய்பவர்கள் நமக்கு உணவு கொடுக்கறாங்க. நெசவுத் தொழில் செய்பவர்கள் நம் மானம் காக்க ஆடை கொடுக்கறாங்க..."என்ற ஆசிரியை தொடர்ந்து,

"நம்ம வகுப்பு மாணவிகளில் யார் நெசவுத் தொழில் செய்யும் குடும்பத்தைச் சேர்ந்தவங்க... யார் உழவுத் தொழில் செய்யும் குடும்பத்தைச் சேர்ந்தவங்க... என்று கேட்டார்.

"வள்ளியும்... புனிதாவும் மேடம்..." மாணவிகள் சொல்ல,

வள்ளியும் புனிதாவும் எழுந்து நின்றார்கள்.

"வள்ளி, புனிதா... நீங்க ரெண்டு பேரும் எவ்வளவு உயர்ந்தவங்க தெரியுமா? உங்க பெற்றோர்கள் செய்யுற புண்ணியமெல்லாம் உங்களுக்குத்தான். நீங்களும் உழவையும் நெசவையும் போற்றணும்..." என்றார். "சரிங்க மேடம்" என்றபடி அமர்ந்தனர் இருவரும்.

மாலை–

வீட்டிற்குச் சென்றதும் வள்ளி அம்மாவுக்கு உதவியாக தார் சுற்ற ஆரம்பித்தாள். அம்மாவின் கண்கள் ஆனந்தத்தால் துளிர்த்தது.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கருத்துகளைக் கூறுங்கள்.
- பாடப்பகுதியிலிருந்து ஆசிரியை கூறிய கருத்துகளை எடுத்து எழுதுங்கள்.

- நாம் பெற்றோருக்கு உதவ வேண்டும் என்ற கருத்தை மையமாகக் கொண்டு கலந்துரையாடுங்கள். கருத்துகளை வெளியிடுங்கள்.

- பாடப்பகுதியை வாசித்து உரையாடலை நிறைவு செய்யுங்கள்.

வள்ளி : "அம்மா....."

அம்மா : வள்ளி பள்ளி முடிஞ்சு வந்துட்டியா? எப்ப வந்தாய்?

வள்ளி :

அம்மா :

வள்ளி :

அம்மா :

வள்ளி :

அம்மா :

வள்ளி :

அம்மா :

- பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றுங்கள்.

  - இரைந்தாள் =
  - வந்துட்டியா =
  - வந்தே =
  - இருந்துச்சு =
  - வாங்கிக்க =
  - எடுத்துக்க =
  - வரலை =
  - தர்றியா =
  - கொடுக்கணும் =
  - சொன்னியே =



## அலகு 8

# அறிவின் திறவுகோல்



ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெருந்துணை புரிவது தகவல் தொழில் நுட்பமாகும். வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி முதலான ஊடகங்கள் மக்களின் வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாதவை.

# காற்றினிலே...



## நண்பன்

வானொலியாம் வானொலி
வகைவகையாம் வானொலி !
வேணும்போது வைக்கலாம்
விரும்பியதைக் கேட்கலாம் !

உலகி லுள்ள செய்தியை
ஒலிபரப்பும் வானொலி !
பலரும் நன்மை அடையவே
பக்கத்துணை வானொலி !

பாட்டுக்கேட்டு மகிழலாம்
பாடங் கூடக் கேட்கலாம்
நாட்டி லுள்ள நிலைமையை
நமக்குச் சொல்லும் நண்பனாம்!

ஒலியின் மூலம் உணர்ச்சியை
ஊட்டு கின்ற வானொலி !
கலைகள் பலவும் படைக்குமாம்
கதைகள் கூறும் வானொலி !

– வி. கிரி

## செயல்பாடுகள்

- பாடலை இராகத்துடன் பாடுங்கள்.
- பாடலை வாசித்து உங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.
- வானொலியில் எந்தெந்த நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன? பாடலாசிரியர் கூறியதை எழுதுங்கள்.
    - ........................................................................
    - ........................................................................
    - ........................................................................
- பாடலை வாசித்து வாக்கியங்களை முழுமையாக்குவோம்.
    - ...............................................மகிழலாம்
    - ................................................ கூறும் வானொலி
    - உலகிலுள்ள ....................................கூறும் வானொலி
    - ....................................... படைக்கும் வானொலி
    - பாடங் கூட.......................................
- பொருத்தமான எழுத்துகளைப் பயன்படுத்தி முழுமையாக்குங்கள்.

அகில இந்திய வானொ .......... (லி/ளி ) ஒலிப.......ப்பு (ர/ற) நாட்டின் நி.........மை (ளை/லை)களையும், காலநிலை அறிந்து விவசாயம் செய்யவும் பக்கத்து..........(னை,/ணை) யாக உள்ளது என ந.......... (ண் /ன்) பனிடம் கூறினான்.

## நானும் ஒருவன்

மாணவர்களே! நீங்கள் ஆவலோடு என் வரலாற்றைக் கேட்க என் முன்னால் அமர்ந்து விட்டீர்கள். என் வரலாற்றைக் கூறுகிறேன் கேளுங்கள்.



இத்தாலி நாட்டைச் சேர்ந்த அறிவியல் அறிஞர் மார்க்கோனி என்பவர்தான் என்னைக் கண்டுபிடித்தார். என்னைக் கண்டுபிடித்த பின்னால்தான்

மார்க்கோனியின் புகழ் பரவியது. 1909–ஆம் ஆண்டு என்னைக் கண்டுபிடித்த மார்க்கோனிக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. நான் பெரிதும் மகிழ்ந்தேன். இரண்டு உலகப் போர்களிலும் என்னைப் பெரிதும் பயன்படுத்தினர்.



சமுதாயத்திற்கு என் பயன் மிகவும் பெரிதாகும். செய்திகளை உடனுக்குடன் தருகிறேன். இன்னிசைப் பாடல்களையும் நாடகங்களையும் மருத்துவம் மற்றும் கல்வி தொடர்பான செய்திகளையும் தருகிறேன். மேலும், பெரியவர்களின் சொற்பொழிவுகளையும் நாட்டுப்புறக் கலைகள் பற்றிய செய்திகளையும் நான் தருகிறேன். நான் திரைப்படப் பாடல்களையும் கதை வசனங்களையும் சில முக்கியமான விழாக்களின் நேரடி ஒலிப்பரப்பையும் தருகிறேன். விலைவாசி மற்றும், வேளாண்மை பற்றிய செய்திகளைச் சூடாகவும் சுவையாகவும் தருகிறேன். இப்படி எல்லா வகைகளிலும் நான் உங்கள் நண்பனாகச் செயல்படுகிறேன்.

நான் உங்கள் அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரிவது போல் நீங்களும் மற்றவர்களுக்குத் துணை புரியுங்கள்.

– தமிழ்ப்பிரியன்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து வானொலி கூறியவற்றைக் கலந்துரையாடிக் கருத்துகளைக் கூறுங்கள்.
- நீங்கள் வானொலியில் விரும்பிக்கேட்ட ஏதேனும் நிகழ்ச்சியைக் கூறுங்கள்.
- கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.
  - வானொலியைக் கண்டுபிடித்தவர் ..................................
  - மார்க்கோனி .................................. நாட்டைச் சார்ந்தவர்
  - வானொலி கண்டுபிடித்தவருக்குக் கிடைத்த பரிசு .................. ................

கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் 'உம்' சேர்த்து எழுதுங்கள்.

**எ.கா : மருத்துவம், கல்வி – மருத்துவமும் கல்வியும்**

- பாடல்கள், நாடகங்கள் – ......................................
- சொற்பொழிவு, செய்திகள் – ......................................
- பாடல்கள், வசனங்கள் – ......................................

கட்டத்தில் உள்ள சொற்களைப் பயன்படுத்தி வாக்கியத் தொடர் எழுதுங்கள்.

| | |
|---|---|
| • செய்திகளை உடனுக்குடன்<br>• கல்விச் செய்திகளை<br>• பாடல்கள், நாடகங்கள்<br>• திரைப்படப்பாடல், வசனம்<br>• விலைவாசி, வேளாண் செய்திகள் | தருகிறேன் |

## தேனொலி

இன்னிசையின் சொந்தமாய், ஏழையின் நண்பனாய் விளங்கும் வானொலியை இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்க்கோனி என்பவர் கண்டுபிடித்தார்.

வானொலிகளுக்கு விளம்பரங்களே வருவாயைத் தருவன ஆகும். மக்கள் வானொலியில் விளம்பரத்தினைக் கேட்டுப் பொருள்களை வாங்க முன்வருவர்.

வானொலியின் மூலம் பல்வேறு நிகழ்ச்சிகள் செயலாக்கம் பெறுகின்றன. அவை இன்னிசை, பக்தி மாலை, விவசாய நிகழ்ச்சி, வானிலை அறிவிப்பு, நலத்திட்ட உதவி, குழந்தை வளர்ப்பு, பிறந்த நாள் வாழ்த்து, தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்பு போன்றன.



கல்வி நிலையில் வானொலி பல்வேறு செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. பள்ளி மாணவர்கள் பங்கு கொள்ளும் நிகழ்ச்சிகளான இளைய பாரதம், அறிவியல் சிந்தனை, அறிஞர்கள் சந்திப்பு, பல்வேறு பாடங்களைப் பற்றி நடத்தப்படும் வகுப்புகள், அஞ்சல் வழிக் கல்விக்கு



உதவியாகச் சில பாடங்களின் விரிவாக்கம் போன்றவை மாணவர்களின் ஆக்கத்திற்குத் துணைபுரிகின்றன.

தொலைத் தொடர்பு சாதனங்கள் நமக்கு இரு விளைவுகளை ஏற்படுத்தும். அன்னப்பறவை தண்ணீரை நீக்கி பாலை அருந்துதல்போல நாம் நல்ல விஷயங்களைக் கேட்டு அதன் படி நடக்க வேண்டும்.

## செயல்பாடுகள்

- கட்டுரையை வாசித்துக் கருத்துகளைக் கூறுங்கள்.
- வானொலியால் கிடைக்கும் பயன்களைப் பூர்த்திச் செய்யுங்கள்.
  - மாணவர்களுக்கு............................ ஒலிபரப்பு
  - உழைப்பால் சோர்ந்த உங்களுக்கு இனிய........................
  - வியாபாரிகளுக்கு ............................தகவல்
  - உழவர்களுக்கு..................................................
  - முக்கிய தினங்களில்..........................................

(பொழுதுபோக்கு, ஆலோசனை, கல்வி,
தேசிய உரைகள், விலை விபரம்)

- கீழே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளைத் தகுந்த இடங்களில் இணைத்துச் சொற்றொடர்களை நிறைவு செய்யுங்கள்.

(யை, ஆல் , கு)

மனிதனின் கேள்வி.........நிறைவு செய்ய மனிதன்........ கண்டுபிடிக்கப்பட்டதே வானொலி ஆகும். வானொலி மாணவர்.......... பயனுள்ள கல்வியை ஒலிபரப்புச் செய்கிறது. கையில் வைத்திருக்கக்கூடிய அளவில் சிறிய வானொலிகள் இன்று சந்தை.... வந்துவிட்டன. நம் சிந்தனை ............தூண்டும் ஒலி பரப்புகளைக் கேட்டு மகிழ்கிறோம்.



# உள்ளம் மகிழ



## பார்க்கலாம் படிக்கலாம்

தொலைக் காட்சி தனைநாமும்
தொலைவில் இருந்து பார்க்கணும்!
கலை அழகைக் கண்டுநாளும்
கண்கள் குளிர ரசிக்கணும்!

நமக்கு மட்டும் கேட்குமளவு
ஒலியைக் குறைத்து வைக்கணும்!
நெஞ்சைத் தொடும் நிகழ்ச்சிகளை
நிறைய பேர்க்குச் சொல்லணும்!

பறவை, மிருகம் வாழ்க்கையினைப்
பார்த்துப் பாடம் கற்கலாம்;
வயலும் வாழ்வும் வாழ்க்கையோடு
இணைந்து இருக்கக் காணலாம்!

உலக நடப்பை ஒரு நொடியில்
வீட்டி லிருந்தே பார்க்கலாம்!
நமது அறிவைப் படிப்படியாய்
நாளும் இதனால் வளர்க்கலாம்!

பல மொழியில் திரைப்படங்கள்
பார்த்து நாமும் மகிழலாம்!
ஒருமைப் பாட்டைக் காக்கும் இது
உயர்வு மிக்க கருவிதான்!

குழ.கதிரேசன்

## செயல்பாடுகள்

தொலைக்காட்சியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் எனப் பாடலாசிரியர் கூறும் கருத்துகளை எழுதுங்கள்.

- ..................................................
- ..................................................

சொற்களை இணைத்தால் தொலைக்காட்சியின் நன்மையே சரியான சொற்றொடரை இணையுங்கள்.

| | |
|---|---|
| • தொலைக்காட்சியைப் பார்ப்பது | பிறரிடம் அதைப் பற்றிக் கூறுவது |
| • ஒலியைக் கேட்பது | உலக நடப்புகள் |
| • நெஞ்சைத் தொடும் நிகழ்ச்சிகளைப் பார்ப்பது | சத்தம் குறைவாக |
| • தொலைக்காட்சியில் பாடம் கற்பது | தொலைவிலிருந்து |
| • ஒரு நொடியில் தெரிந்துகொள்வது | தொலைக்காட்சி |
| • ஒருமைப்பாட்டை விளக்கிக் காட்டுவது | பறவை, மிருகங்களின் வாழ்க்கைப் பாடம் கண்டு |

கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கு இணையான சொற்களை அடைப்புக்குள் இருந்து எடுத்து எழுதுங்கள்.

- அழகு ..............................................
- தொலைவில் ..............................................
- இணைந்து ..............................................
- நாளும் ..............................................
- பார்த்து ..............................................

(சேர்ந்து, எழில், கண்டு, தூரத்தில், தினந்தோறும்)

## ஆணவம் கொள்ளாதே!

ஒரு வீட்டில் தொடர்புத்துறைச் சாதனங்களான தொலைபேசி, தொலைக்காட்சி மற்றும் வானொலி ஆகிய மூன்றும் இருந்தன. அவை ஒன்றுக்கொன்று பொறாமை கொண்டு தங்களுக்குள் உரையாடிக் கொண்டன.



**தொலைபேசி** : என்ன.... தொலைக்காட்சி, வானொலியாரே! உலகில் நானே சிறந்தவன், என்பதை ஏற்க ஏன் மறுக்கின்றீர்கள்? நான்தான் எவ்வளவு தூரமானாலும் தொடர்பு கொள்ளப் பயன்படுகிறேன். தெரியுமா?



**வானொலி** : அடக்கமாகப் பேசு, நீ கம்பி வழி மட்டுமே செயல்படுவாய் . அது இல்லாவிடில் உன் சேவை எடுபடாது. நானோ எந்தக் கம்பியும் இல்லாமல் செயல்படுவேன். மக்களுக்குச் செய்திகள் மட்டுமின்றி பொழுதுபோக்குச் சாதனமாகவும் பயன்படுகிறேன்.



**தொலைக்காட்சி** : நீங்கள் இருவரும் உங்கள் பெருமையைப் பேசுவதை நிறுத்துங்கள். உங்கள் இருவரையும் விட நானே சிறந்தவன். நான் செய்தி மட்டுமன்றி படத்தையும் காட்டும் வல்லமையுள்ளவன். எனவே நானே சிறந்தவன் தெரியுமா? (திடீரென புதுக்குரல் ஒன்று கேட்டது )



**கணினி** : நீங்கள் மூவரும் கூறுவது அனைத்தும் உண்மையே. உங்களைப் போன்றே நானும் சில சிறப்புகளை உடையவன். ஆனால் நான் என் பெருமையைக் கூறிக்கொள்ள விரும்பவில்லை. காரணம் நம்மைவிட மேலானவன் ஒருவன் இருக்கிறான். அவன் தான் மனிதன். அவன்தான் நம்மை உருவாக்கியவன். அவனன்றி நாம் கடுகளவும் அசையமுடியாது. எனவே, ஆணவம் கொள்வதை நிறுத்துங்கள்.

– உமா பதிப்பகம்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- கதாபாத்திரங்களாக மாறி நடித்துக் காட்டுங்கள்.
- அலைப்பேசி பேசியிருந்தால் என்ன பேசியிருக்கும்? கலந்துரையாடி எழுதுங்கள்.
- பாடப்பகுதியினை வாசித்துக் கணினி கூறிய தீர்ப்பை எழுதுங்கள்.
- கீழே தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - பொறாமை
  - சிறந்தவன்
  - பெருமை
  - அடக்கமாக
  - ஆணவம்
  - பொழுதுபோக்கு

## ஒளியும் ஒலியும்

இன்றைய உலகத்தில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கவர்ந்த சிறந்த பொழுதுபோக்குச் சாதனமாக நான் திகழ்கின்றேன்.

ஆம், நான் ஒரு தொலைக்காட்சி! எத்தனையோ அழகான காட்சிகளையும் கலைவடிவங்களையும் செய்திகளையும் தருகிறேன். அழகான திரையில் ஒளியும் ஒலியும் சேர்த்து நான் மக்களின் கண்களுக்கு விருந்தாக வழங்குகின்றேன்.

இன்று, நான் இல்லாத வீடுகளையே பார்க்க முடியாது. சினிமா என்ற ஊடகம் ஆரம்பித்த நாள் முதல் இந்த மக்களிடையே நான் ஏற்படுத்திய மாற்றங்கள் ஏராளமாகும். பல நல்ல கருத்துகள், ஆடல்கள், பாடல்கள், பொழுது போக்குகள் என்று பல கதைகள் சொல்லும் சினிமாக்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பங்கு எனக்கு இருக்கின்றது. படங்களையும் உங்கள் வீட்டுக்கே கொண்டு வந்து நான் காண்பிப்பேன்.

வீட்டிலுள்ள அனைவருக்கும் பிடித்த பல வகையான நிகழ்வுகளையும் நான் காண்பிக்கிறேன். எனவே என்னை அனைவருக்கும் பிடிக்கும்.

உலகம் செல்கின்ற பாதையில் இந்த மனிதர்களும் வளர்ச்சி அடைந்து செல்ல வேண்டும். உலகளாவிய தொழில்நுட்ப சாதனமாக நான் நகரங்கள் முதல் கிராமங்கள் வரை இன்று வந்துவிட்டேன்.

மனித குலத்தின் அடுத்த பரிணாமத்தினையும் அவர்களது மனநிலையினையும் மாற்றிய பங்கு நிச்சயமாக எனக்கு உண்டு என்பதை இந்த உலகம் அறியும்.

– சிறுகதைகள்.*com*

## செயல்பாடுகள்

- கதைப்பகுதியை வாசித்துக் கருத்துகளைக் கூறுங்கள்.
- தொலைக்காட்சி தரும் நிகழ்ச்சிகளை எழுதுங்கள்.
    - ..........................................................
    - ..........................................................
    - ..........................................................
- தொலைக்காட்சி தரும் பயன்கள் எவை என்று கூறுங்கள். எழுதுங்கள்.
    - ..........................................................
    - ..........................................................
    - ..........................................................
- தொலைக்காட்சி காண்பதால் உங்களுக்குக் கிடைத்த அனுபவங்களை எழுதுங்கள்.
- இணைத்து எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| | செய்திகளை | |
| | காலநிலைகளை | காணலாம் |
| | சொற்பொழிவு | இரசிக்கலாம் |
| | சினிமா, நாடகங்கள் | கேட்கலாம் |
| தொலைக்காட்சியில் | வயலும் வாழ்வும் நிகழ்சிகளை | அறிந்து கொள்ளலாம் |
| | சுற்றுலா இடங்களை | பார்க்கலாம் |
| | கார்ட்டூன் படங்களை | |
| | உலக நடப்புகளை | |



# ஹலோ! ஹலோ!



## குரலில் பேசிடுவோம்

தொலைபேசி மணிஅடித்து அழைக்குது – உடன்
பட்டனழுத்தி காதினருகே வைக்குது
ஹலோ ஹலோ என்றுதானே பேசுது – பின்
ஆனந்த தாண்டவம் ஆடுது

வணிகத்துக்குப் பேருதவி செய்யுது – தினம்
வெளியூர் செல்வதையும் தடுக்குது
போக்குவரத்துப் பயணத்தையும் சுருக்குது – அதில்
வருமானம் இருமடங்காகப் பெருக்குது

அன்புபாசம் பகிர்ந்துகொள்ள உதவுது – உயிர்
நண்பர்கள் ஆவதற்குத் துணை புரியுது
சாதனைகள் புரிவதற்குக் கை கொடுக்குது – மனம்
சந்தோசத்தில் கடமைகள்மிக சிறக்குது

இரண்டுசக்கர வண்டியில் பேசிக்கொண்டே ஓடுது
சிந்தனைகள் சிறகடிக்க மறக்குது
எதிர்வரும் வாகனமோ மோதுது – நொடியில்
எத்தனையோ வேதனைகள் நேருது

அரசியலில் ஆட்சியை ஆளுது – அரசு
அலுவலகத்தில் தொல்லையாக மாறுது
நேரத்தை நிர்வாகம் செய்யுது – கையில்
கணநேரம் இல்லையானால் மனம் தவிக்குது

## செயல்பாடுகள்

- பாடலை வாசித்துக் கருத்துகளைக் கூறுங்கள்.
- இரண்டாம் எழுத்து ஒரேபோன்றுவரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
  - ..................................... • .....................................
  - ..................................... • .....................................

## மோகம்

திருச்சிக் கல்லூரியில் படிக்கும் சித்ரா விடுமுறையில் தனது சொந்த ஊரான திருநெல்வேலி செல்ல, பேருந்து நிலையத்திற்கு வந்தாள். திருநெல்வேலிப் பேருந்தில் கூட்டம் நிறைய இருந்தது. எனவே மதுரை சென்று மாறிக் கொள்ளலாம் என மதுரை வண்டியில் ஏறினாள்.

நடத்துநரிடம், "மதுரைக்கு ஒரு டிக்கெட்" எனத் தன்னிடமிருந்த ஐந்நூறு ரூபாய் தாளை நீட்டினாள். "ஏம்மா ஐந்நூறு ரூபா தர்றீங்க. இருநூறு ரூபா தாள் இருந்தா தாங்க."

"என்னிடம் இருப்பதே இந்த ஐந்நூறு மட்டுந்தான்." சரி பயணச் சீட்டைப் பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள். மீதித் தொகையைப் பிறகு தருகிறேன்.

பயணச்சீட்டைப் பைக்குள் வைத்து விட்டு, கைப்பேசியை நோண்ட ஆரம்பித்தாள். நேரம் போனதே தெரியவில்லை. 'மதுரை' எனச் சத்தம் கேட்டு, திடுக்கிட்டுக் கைப்பேசியை அணைத்து விட்டு இறங்கினாள்.

திருநெல்வேலிப் பேருந்தைப் பிடிப்பதற்குள் ஒரு டீ குடிப்போம் என டீக் கடைக்குள் சென்றாள். டீ குடித்து விட்டு காசு கொடுக்க பைக்குள் கை விட்டவள் அதிர்ந்தாள். பயணச் சீட்டுச் சுருண்டு கிடந்தது. தேடிப் பிடித்துப் பதினைந்து ரூபாய் சில்லறையைச் சேர்த்து டீக்குக் கொடுத்து விட்டு, தான் வந்த பேருந்தைக் கண்டுபிடிக்க முடியாமல் கண் கலங்கி நின்றாள். ஊருக்குச் செல்ல வேறு பணம் கூட இல்லை.



'ஏம்மா! இந்தாங்க உங்க மீதிப் பணம்' எனக் கூறக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

"தனியா போகிறீர்கள். எவ்வளவு கவனமா இருக்கணும். இப்படியா கைபேசியில் மயங்கிக் கிடப்பாங்க. கொஞ்சம் தவிக்கட்டும் என வேடிக்கை பார்த்துக்கிட்டேதான் இருந்தேன். இனிமேலாவது கவனமா இருங்க" என்றார் நடத்துநர். நன்றியுடன் கை கூப்பினாள் சித்ரா.

– அரும்புகள் பிரதாப்

## செயல்பாடுகள்

- கதையை வாசித்துக் குழுவில் கலந்துரையாடிக் கருத்துகளை வெளியிடுங்கள்.
- பாடப்பகுதியில் வரும் ஆங்கிலச் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.
  - ......................................................

## நானும் ஓர் உறுப்பு

அலெக்சாண்டர் கிரகாம்பெல் என்பவரால் முதலில் தொலைப்பேசியாகக் கண்டறியப்பட்ட நான் அளவில் பெரியதாக இருந்தேன். மற்றும் மின்வயர்களுடன் இணைக்கப்பட்டு இருந்தேன். பிறகு கைப்பேசியாக படிப்படியாக உருமாற்றம் பெற்றேன். ஒரு மனிதனுக்குக் கை, கால், மூக்கு, காது போன்ற உறுப்புகள் எவ்வளவு அவசியமோ அதுபோன்று கைப்பேசியும் அவசியமான ஒன்றாகிவிட்டது.

பல்வேறு கம்பெனிகள் என்னை வானொலி வசதி, நிழற்பட வசதி, ஒளி, ஒலி பதிவு வசதி, இணையதளம், அதிக நினைவுத்திறன் ஆகிய வசதிகள் கொண்டவனாக உருவாக்குகின்றன. இதனால் மக்கள்



என்னைப் பெரிதும் விரும்பிப் பயன்படுத்துகின்றனர். சிறுவர்களும் என்னைப் பயன்படுத்தி விளையாட்டுகள் விளையாடுகின்றனர். என்னை வைத்துக் காவல் துறையினர் பல குற்றங்களை விசாரித்து உண்மையைக் கண்டறிகின்றனர்.

அதுமட்டும் அல்லாமல் என்னைப் பயன்படுத்தி இணையதளம் மூலம் உலகத்தையே தன் கைக்குள் வைத்துள்ளனர். விளம்பர நிறுவனங்கள் என்னை வைத்து விளம்பரம் செய்கின்றன. நான் ஒருவன் மட்டுமே தொலைக்காட்சியாகவும், வானொலியாகவும், தொலைப்பேசியாகவும், ஒளி, ஒலி படக்கருவியாகவும், ஏன் நாட்குறிப்பேடாகவும் பயன்படுகிறேன். இத்தகைய பயன்பாடுகளைத் தரும் என்னை வைத்து நல்வழியில் பயன்படுத்தினால் நானும் உங்களுக்குப் பல நன்மைகளை வழங்குவேன்.

– ஜெ. நிர்மலா



## செயல்பாடுகள்

- பாடப்பகுதியினை வாசித்து மையக்கருத்தினைக் கூறுங்கள்.
- கைப்பேசியில் என்னென்ன வசதிகளைப் பயன்படுத்துகிறார்கள் எழுதுங்கள்.
  - ................................................ 
  - ................................................
  - ................................................
  - ................................................
- கைப்பேசி, தான் யாருக்கெல்லாம் பயன்படுகிறேன் என்று கூறியது. எழுதுங்கள்.
  - ................................................
  - ................................................
  - ................................................
  - ................................................
- ஒன்றும், பலவும்

  **எ.கா. பறவை – பறவைகள்**
  - சிறுவர் – ........................................
  - விளையாட்டு – ........................................
  - குற்றம் – ........................................




- தொடர் அமைத்து எழுதுங்கள்.
  - வானொலி : ........................................
  - கைப்பேசி : ........................................

## அகர முதலி

| | |
|---|---|
| அசைத்து | – ஆட்டி |
| அசைவு | – இயக்கம் |
| அஞ்சி | – பயந்து |
| அடக்கம் | – பணிவு |
| அடிக்கடி | – பலமுறை |
| அண்டி | – சார்ந்து |
| அமரும் | – உட்காரும் |
| அரண் | – கோட்டை |
| அலைபேசி | – கைப்பேசி |
| ஆக்கம் | – படைப்பு |
| ஆணவம் | – அகந்தை |
| ஆயுட்காலம் | – வாழ்நாள் காலம் |
| ஆலை | – தொழிற்சாலை |
| ஆவல் | – விருப்பம்/ஆசை |
| இரை | – உணவு |
| இனம் | – வகை |
| ஈரப்பதம் | – நீர்த்தன்மை |
| உதிர்ந்து | – விழுந்து |
| உலாவுதல் | – நடத்தல் |
| எண்ணுதல் | – சிந்தித்தல் |
| ஏடு | – புத்தகம் |
| ஐயம் | – சந்தேகம் |
| ஓசை | – சத்தம் |
| ஓரம் | – மூலை /விளிம்பு |
| கதி | – நிலைமை /நிலை |
| கருதியது | – நினைத்தது |
| கனிகள் | – பழங்கள் |
| கிண்ணம் | – குழிவான பாத்திரம் |
| குடைந்தும் | – துளைத்தும் |
| குமுறி | – முழங்கி |
| கெஞ்சி | – மன்றாடி |
| சகதி | – சேறு |
| சந்தர்ப்பம் | – தருணம் |
| சமயம் | – நேரம் |
| சாய்ந்தது | – விழுந்தது |
| சிரமம் | – கடினம் |
| சுடர்தல் | – ஒளிர்தல் |
| சுபாவம் | – குணம் |
| சுலபம் | – எளிது |
| செல்வந்தர் | – பணக்காரர் |
| சேவை | – தொண்டு |
| தகவல் | – செய்தி |
| தறி | – இயந்திரம் |
| தாண்டவம் | – நடனம் |
| திருப்தி | – மனநிறைவு |
| துன்பம் | – வருத்தம் |
| தொண்டு | – உதவி |
| தொலைவு | – தூரம் |
| நயமாக | – தந்திரமாக |
| நிறைய | – அதிகம் |
| நுனி | – முனை |
| பஞ்சணை | – பஞ்சு மெத்தை |
| பணி | – வேலை |
| பத்திரமாக | – கவனமாக |
| பராமரிப்பு | – பாதுகாப்பு |
| பாசம் | – அன்பு |
| பாவனை | – தோற்றம் / தோரணை |
| பிடுங்கி | – பறித்து |
| புசிக்க | – சாப்பிட |
| பெருவாரி | – பெரும்பான்மை |
| பொதி | – மூட்டை |
| பொழில் | – சோலை |
| பொறுப்பு | – கடமை |
| மகத்தானது | – சிறந்தது |
| மணி | – முத்து |
| மா | – மாமரம்/ பெரிய |
| முறைப்பு | – முறைத்தல் |
| மூட்டை | – கட்டு |
| மேலானவன் | – சிறந்தவன் |
| யோசனை | – சிந்தனை |
| வல்லமை | – திறமை / ஆற்றல் |
| வலி | – வேதனை |
| வலிமை | – பலம் |
| வனம் | – காடு |
| வான் | – வானம் |
| விடுப்பு | – அனுமதி |
| விரைவு | – வேகம் |
| வீதி | – தெரு |
| வெட்டியாக | – வீணாக |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

**51 அ பிரிவுக்கூறு**

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*


**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,

கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in


**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**

**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online* ***R. T. E Monitoring : www.nireekshana.org.in***